பக்கங்கள்: 08

விலை: ரூபா 10.00

# சங்கமம்
# SANGAMAM

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

கூட்டுறவுக் குரல் Voice of Co-op

ஆறு 2 | திருவள்ளுவர் ஆண்டு 2029 | மார்ச் 1999 | அருவி 7

★ இராணுவத்தின் ஒருதலைப்பட்சமான போக்கு உணவு வாகனத் தொடரணிகள் இடைநிறுத்தம்

அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துவருவதில் ப.நோ.கூ.சங்கங்களுக்கு நெருக்கடி

# கிளி. முல்லை. மாவட்ட புலம்பெயர்ந்த மக்கள் நிவாரணம் பெறுவதில் தடங்கல்!

உணவு வாகனத் தொடரணி வன்னிக்கு வருவதற்கு இராணுவம் அனுமதிக்காததால் புலம்பெயர்ந்த மக்கள் நிவாரணம் பெற முடியாமல் அவதி.

சிறிலங்கா அரசும், இராணுவமும் தமிழ்ப் பிரதேசங்களில் புதிய புதிய போர்முனைகளைத் திறப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனவே தவிர போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட முன்வரவில்லை என வெகுஜன அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

வன்னிக்கு வரும் அரச அதிபரின் உணவு வாகனத்தொடரணிகள் ஒருதலைப்பட்சமான இராணுவத் தலையீடு காரணமாக அடிக்கடி சீர்குலைந்து வருவதால்.

அரசின் நிவாரண வெட்டுக்கு மத்தியில் அடிப்படை வசதிகளற்ற அன்றாட பிழைப்புக்கு வழியின்றி பாதி நிவாரணத்தை மட்டுமே நம்பி அரைவயிறும் கால் வயிறுமாக காலத்தைக் கழிக்கும் புலம்பெயர்ந்த மக்கள் பெரும் பாதிப்பை எதிர் நோக்குகிறார்கள்.

அதேவேளை ரணகோச இராணுவநடவடிக்கைக்கு பின்னர் தொடரணியூடாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துவருவதில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடும் நெருக்கடியை எதிர் நோக்குவதால் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை எடுத்துவர முடியாத சூழ்நிலை தோன்றியுள்ளதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புலிகளை ஓரங்கட்டிய தீர்வுத்திட்டம் சாத்தியமற்றது

– சுமணசிறி லியனகே

புலிகளை ஓரம்கட்டி, மிதவாதச் சக்திகளின் ஆதரவுடன் தீர்வுத்திட்டமொன்றை காண்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. நேர்மையான அணுகுமுறையே வேண்டும் என பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் சுமணசிறி லியனகே தெரிவித்துள்ளார்.

இடதுசாரிச் சிந்தனையுடைய இவர் கருத்துத் தெரிவிக்கையில் கடந்த ஐம்பது வருடங்களாக சிங்களவர்களாகிய எம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளோ

(7ம் பக்கம் பார்க்க)

## இலண்டன் தமிழ் அமைப்பு உதவி

புலம்பெயர்ந்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்மக்களுக்கு இலண்டனில் இயங்கும் தமிழ் அகதிகள் அறக்கட்டளை நிறுவனம் உடுபுடைவைவகைகளை அனுப்பிவைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## படையினரால் கைதாகி காணாமல் போனோர் பட்டியலில் சிறிலங்கா இரண்டாமிடம்

படையினரால் கைதாகி காணாமல போனோர் பட்டியலில் சிறிலங்காவிற்கு இரண்டாமிடம் கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

உலகில் ஆயுதப் படைகளினால் கைதாகி காணாமல் போவோர் தொகை அதிகரித்து வரும் வேளையில் ஈராக்கிற்கு அடுத்தபடியாக சிறிலங்காவே முன்னணி வகிப்பதாக ஐ நா மனித உரிமை ஆணையம் குற்றம் சாட்டியுள்ளது. ஆணையம் கூறும் தொகையை விட கைதாகி காணாமல் போனோர் தொகை மிக அதிகமானது என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## அன்னை பூபதி நினைவு நாள்

இந்திய வல்லாதிக்க சக்திகளை எதிர்த்து உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்து அதன் மகிமைகளை உலகுக்கு உணர்த்திய அன்னை பூபதியின் 11வது ஆண்டு நினைவு நாள்கொண்டாட்டங்கள் வன்னிப்பெருநிலப் பரப்பெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்

(7-ம் பக்கம் பார்க்க)

துரையப்பா விளையாட்டரங்கு

## புதைகுழி தோண்டும்பணி இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கின் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற மனிதப் புதைகுழி விவகாரம் சிறிலங்கா அரசிற்கு மேலும் அவப்பெயரை தேடிக் கொடுத்துள்ளது

தொடர்ந்து அப்பகுதியில் புதைகுழி தோண்டும் பணியை அரசு இடைநிறுத்தியுள்ளது குறிப்பிட்ட குழிகளுக்கிடையே மேலும் பல எலும்புக் கூடுகள் தெரிகின்றன. இது தோண்டி எடுக்கப்பட்டால் மேலும் பல உண்மைகள் வெளிவரலாம்' என்பதால் சிறிலங்கா அரசு புதைகுழி விவகாரத்தை இருட்டடிப்பு செய்து வருகிறது என செய்திகள் தெரிவிக்கின்றன.

## கிழக்கிலங்கையில் முதல் தமிழ்த் திரைப்படம் தயாரிப்பு!

கிழக்கிலங்கைத் தமிழ்க் கலைஞர்களின் அரிய படைப்பினால் கிழக்கிலங்கையில் முதன்முறையாக தமிழ்த் திரைப்படமொன்று உருவாகியுள்ளது.

இவர்களால் உருவாக்கப்பட்ட "அன்புள்ள அவள்" என்னும் திரைப்படம் கல்முனை திரையரங்கொன்றில் அண்மையில் காண்பிக்கப்பட்டது.

## நெல்லிற்கு உரிய விலை வழங்குக

அத்தியாவசிய சேவைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி விவசாயிகளிடமிருந்து ப.நோ.கூ.சங்கங்கள் உரிய விலையில் நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டும் என இராமநாதபுரம் திட்டக்குழுத் தலைவர் திரு ஆறுமுகநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நெற் சந்தைப்படுத்தல் சபை செயற்படாத காரணத்தால் விவசாயிகள் தனியார் வர்த்தகர்களின் சுரண்டலுக்கு உட்படாமல், நியாயமான விலையில் தமது நெல்லை விற்பனை செய்யவேண்டும் என்பதற்காகவே ப.நோ.கூ.சங்கங்களும் குறித்த விலையில் நெல் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என அரசாங்க அதிபர் இதற்கான பணத்தினை வழங்கியுள்ளார், ஆயினும் சில சங்கங்கள் குறித்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்யாமல் குறைவான விலையில் நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர், இன்னும் சில

(7-ம் பக்கம் பார்க்க)

## பொதுக்கிணறு திறந்து வைப்பு

முழங்காவில் இரணைமாதா நகர் பொது மக்களின் குடிநீர்த்தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு பொதுக் கிணறு ஒன்று கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

கிளி அரசாங்க அதிபர் இ, இராசநாயகம், பூநகரி பிரதேச செயலர் இ இரவீந்

(7-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணத்தவர்கள் பலர் சேர்ந்து வாழும் ஒரு நகர்பகுதி அபார்ட்மென்ட் (Apartment) அது பிற்பகல் வேலை முடிவடைந்து அங்கு தங்கி இருக்கும் இளைஞர்கள் எல்லோரும் திரும்பி இருந்ததால் Apartment சற்றுக் கலகலப்பாக இருந்தது. ஸ்ரீறியோ கசற்றில் தமிழ்ப்பாடல் சற்று சத்தமாகவே ஒலித்துக்கொண்டிருந்தது. அழைப்பு மணியின் நாதம் இனிமையாய் கேட்ட போதும், துணுக்குற்று ஒருவரை ஒருவர் திரும்பிப்பார்த்தனர் ஸ்ரீறியோவில் ஒலித்த பாடல் தானாகவே இளைய தயக்கத்துடன் வந்த ஒருவர் கதவைத் திறக்கின்றார். வெள்ளையசீருடையினர் இவர்களைக் கண்டதும் 'சல்யூட்' வைத்து தமது அடையாள அட்டையை எடுத்து நீட்டுகின்றனர். அவ்வட்டை அவர்கள் குடிவரவு குடியகல்வுப் பகுதி காவல் துறை உத்தியோகத்தர்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது. இவர்களும் கேட்காமலே தமது வதிவிட அனுமதி அட்டைகளைக் காண்பிக்கின்றனர். பின்னர் தொந்தரவுக்கு மன்னிப்புக் கேட்டவாறு காவல்துறை உத்தியோகத்தர்கள் நகர்கின்றனர். இது ஐரோப்பிய நாடான பிரான்சின் நகரமொன்றில் நடைபெறுகின்ற சம்பவமாகும்.

> 1970ஆம் ஆண்டில் இலங்கை அரசு ஆட்பதிவுச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்த போது அதுபற்றி தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரும், தமிழர் சுயாட்சிக் கழக நிறுவனருமான திரு வ. நவரட்ணம் அவர்கள் தெரிவிக்கையில் தமிழர்களுக்கு சிங்கள அரசு கட்டப்போகும் நாய்ப்பட்டி இதுவாகும் கட்டாக்காலி நாய்களில் இருந்து வீட்டு நாய்களை வேறுபடுத்துவதற்கு எப்படி மாநகர சபை, நகர சபை என்பன தகடுகளை வழங்கி அவற்றைதோற பட்டிகளில் இட்டு கழுத்தில் கட்டும்படி பணித்தனவோ அவ்வாறே இலங்கை அரசும் எதிர்காலத்தில் தமிழர்களை அடையாளம் காணவும், திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடவும் இத் தேசிய அடையாள அட்டைகளை வழங்குகிறது'' எனத் தெரிவித்தார்.

சொந்த நாட்டிலேயே தமது மக்களை தரம் பிரித்து இரண்டாம் தரப் பிரஜைகளாக அடையாள அட்டைப் பரிசீலனைகளை படையினரைக் கொண்டு தனிமனித கௌரவங்களைப் பாதிக்கும் வகையில் நடத்துகிறது சிறீலங்கா அரசு. நள்ளிரவு வேளைகளில் தூங்கிக் கொண்டிருப்பவர்கள் எழுப்பப்பட்டு தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுவது மட்டுமல்ல பெண்கள் கூட அவர்களின் துயில் உடைகளுடன் (Nightdress) வெளியே கொண்டுவரப்பட்டு சில வேளைகளில் விசாரணைக்கென அப்படியே உடை மாற்றுவதற்கு கூட அவகாசம் கொடுக்கப்படாது காவல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவமானப்படுத்தப்படுவது சிறீலங்காவில் அதுவும் குறிப்பாக அதன் தலைநகர் கொழும்பில் மட்டுமே நடைமுறையில் உள்ளது இரண்டாம் உலகப் போரில் கிட்லரின் நாஜிப் படையினரால் யூதர்கள் இவ்வாறு அவமானப்படுத்தப்பட்டும் இலட்சக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டதுமான சம்பவங்களின் பின்பு சிறீலங்கா அரசின் நடவடிக்கை தான் இனவாத வெளிப்பாட்டில் மக்கள் அவமானப்படுத்தப்படும் மற்றொரு நிகழ்வாகும்.

சிறீலங்கா அரசின் இவ்வாறான போக்குப் பற்றி ஏறக்குறைய 30 வருடங்களுக்குமுன்பே தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரும் தமிழர் சுயாட்சிக்கழக நிறுவனருமான திரு. வ. நவரட்ணம் அவர்கள் தெரிவித்திருந்தனர் 1970 ஆண்டில் இலங்கை அரசு ஆட்பதிவுச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தபோது அதுபற்றிஅவர் தெரிவிக்கையில் ''தமிழர்களுக்கு சிங்கள அரசு கட்டப் போகும் நாய்ப்பட்டி இதுவாகும் கட்டாக்காலி நாய்களில் இருந்து வீட்டு நாய்களை வேறுபடுத்துவதற்கு எப்படி மாநகர சபை நகர சபை என்பன தகடுகளை வழங்கி அவற்றை தோறபட்டிகளில் இட்டு கழுத்தில் கட்டும்படி பணித்தனவோ அவ்வாறே இலங்கை அரசும் எதிர்காலத்தில் தமிழர்களை அடையாளம் காணவும், திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடவும் இத் தேசிய அடையாள அட்டைகளை வழங்குகிறது'' எனத் தெரிவித்தார்

- சஞ்சிகா -

இன்று தேசிய அடையாள அட்டைகள் மாகாண ரீதியாக பிரிக்கப்பட்டு வழங்கப்படுவதுடன் வடகிழக்கு மாகாணத்துக்கு என இல (4) வழங்கப்பட்டதுடன் இதன் மூலம் ஒருவர் இலங்கையின் எப்பகுதியில் இருந்தாலும் அவர் வடகிழக்கு மாகாணத்தை அதாவது தமிழர் பாரம்பரிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது இலகுவில் அடையாளப் படுத்தக் கூடியவாறான நடைமுறைகளை இன்று அரசு ஆட்பதிவுத் திணைக்களத்தினூடு வழங்கப்படும் தேசிய அடையாள அட்டைகள் மூலம் மேற்கொண்டுவருகிறது.

கடந்த மாதம் தென்னாபிரிக்காவில் இருந்து பதினொரு பத்திரிகையாளர்கள் யாழ் குடாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு வருகை தரவிரும்பிய போதும் படையினரின் அனுமதி கிடைக்கவில்லை ஆயினும் குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்த இவர்கள் இராணுவ நடவடிக்கையின் கவடுகள் இன்றும் அப்படியே உள்ளது என்பதனையும், குடாநாட்டு மக்கள் மிகுந்த நெருக்கடிக்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதனையும் தெரிவித்திருந்தனர்.

யாழ் அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட இவர்கள் அங்குள்ள உயர் அதிகாரி ஒருவரிடம் அவருடைய அடையாள அட்டையை காட்டும்படி கேட்டிருந்தனர். அவரால் காட்டப்பட்ட மூன்று அடையாள அட்டைகளையும், தமது வீடியோ கமராவிற்குள் உள்ளடக்கிக் கொண்ட இவர்கள் தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை இராணுவ அடையாள அட்டை என மூன்று அட்டைகளையும் வழங்கியுள்ள அரசு இதன் மூலம் யாருடைய பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்துகிறது என வினாவியுள்ளார் யாழ் குடா நாட்டில் வாழும் மக்களுடைய பாதுகாப்பையா அல்லது அங்கு நிலை கொண்டுள்ள பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பையா என்றகேள்விக்கு விடை சொல்ல முடியாது அரச செயலக அதிகாரிகள் திணறியதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன இவ்வடையாள அட்டைகள் மூலம் குடா நாட்டு மக்கள் ''திறந்த சிறைச்சாலைக்கைதிகள்'' ஆகியுள்ளனர் என்பதனையும் தென்னாபிரிக்கப்பத்திரிகைக்குழு தெரிவித்துள்ளது.

உயிர்வாழுவதற்காய் தம் படம் ஒட்டிய அட்டைகளைக் கொண்டலையும், ஓர் இனமாக தமிழினம் மட்டுமே இருக்க முடியும் இந்நிலையில் இரவில் வீதியிறங்கா வாழ்க்கையும் சென்றிகளில் இறங்கி சைக்கிள் உருட்டிச் செல்லும் வாழ்க்கையும் இனித்துப் போனது எப்படி எனும் புவன சித்தாரனின் கவிதை அடையாள அட்டைகளுடன் சிறையாகிப் போன யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கைக்கு சாட்சியம் ஆகிறது.

---

இருட்டில் வீதிகளையே
காணாத வாழ்வில்
எப்படிப் பிடித்துப் போயிற்று?
துவிச்சக்கர வண்டிகளை
உருட்டிப்பழக
அனுமதிக்கும் வாழ்க்கையின்
என்ன இலயிப்பு?
ஏன் இப்படி?

# கவிதை வெளி

## கண்ணிருந்தும் குருடராய்..

செய்தித் தடை
இருளின் பின்னேயும்,
எம் கண்ணீரின்
துயரக் கதை கேட்டாய்
துன்பம் விரவிய — எம்
வாழ்வை எடுத்துரைக்க,
நீ இருக்கின்றாய்
ஜெகத் கஸ்பார்
பலகோடி மக்கள்
தரும் பலம் பெற்றோம்.
சொந்த நலன்களினுள்
மானுடம் புதைத்தவரின்
உலகில் — உண்மைக்கு
ஒளிகொடுக்க,
உன்னால் மட்டும்
எப்படி முடிந்தது?
இராணுவச் சப்பாத்துக்களினால்
சீரழிந்த எம் வாழ்வியலை
கடித சாட்சியங்களால்
நீ உணர்ந்தாய்
கண்ணிருந்தும் குருடராய்,
காதிருந்தும் செவிடராய்
தம்மவர் துயரத்தை
உணர்ந்துகொள்ளாப்
பலரிங்கு இன்னும் உள்ளனரே

தர்சிகன்

## வியப்பும் செயலும்

மண்காத்த வீரரின்
மகத்தான நாளினில்
மறவர் படையின்
மாண்புமிகு தலைவனின்
மனமறியும் ஆவலாய்
மற்றோர்கள் காத்திருக்க
அழகு தமிழில்
ஆழமான சொற்றொடரில்
இலங்கை நிலையை
ஈனர்களின் கொடுமையை
உலகுக்கு ஒப்புவிக்க
ஊரே மகிழ்ந்து
எல்லோரும் கூத்தாடி
ஏக்கம் கலைந்து
ஐக்கிய வாழ்விற்கென்ன
ஒட்டிசுட்டானிலே
ஓர்மம் காட்டிய
அம்மணியின் படைக்கு
அழிவு வருவது நிஜம்

காவலூர்ச் செல்வம்

## மனிதா

சுடுகாட்டில்
சுட்டுக் கொண்டிருக்கும்
பிணத்தைப் பார்த்து
நான் அழுகிறேன்
அருகில் கிடக்கும்
மண்டையோடு மட்டும்
என்னைப் பார்த்து
சிரிக்கிறது;
மரித்த மனிதங்களைப்
பார்த்து
மரிக்கப் போகும் மனிதா!
நீ ஏன்
அழுகிறாய் என்று.

ஆக்கம்
வேல், லவன்
கந்தபுரம்

## பழைய பெயர்

நான்கு கால் மாறி
இரு கை காலென
நிமிர்ந்து
உருமாறி கூர்ப்பு
நீங்கி மனிதம் எனும்
நாமம் பூண்டு.

நாகரீக அணிகலம்
நாளாந்தம் மாறிடும்
விஞ்ஞான விளைவுதாரர்
என
உலகை ஆட்டிப் படைக்கும்
மானிடர்,
இன்னும் மாற்ற முடியாத
செல்லாக் காசாக மடிச்சிலிட்டு
வைத்திருப்பதோ!

இந்த மனசு
ஆயிரம் மாறியென்ன — இவர்
ஆரம்ப நாமமாய்
மனசு உள்ளதுவே

ஊற்றூர் திரு

## ஆவியே உனை அனுப்புவோம்

வண்டியில் ஏறவும் வரிசை
வள்ளத்தில் போகவும் வரிசை
வெண்ணிலாத் திரையிலும் வரிசை
வேளாண்மை வெட்டவும் வரிசை
வைகறை வேளையிலும் வரிசை
வவுனியா போவதற்கும் வரிசை
வானத்தில் ஆவிகளும் வரிசை
வவுனியா வடக்கிலும் வரிசை
ஆவியுனை அனுப்பவும் வரிசை
பூமியினை எமதாக்கவும் வரிசை

நீர்வைக்குமார்

---

இளங்கவிஞர்களுக்கு

கவிதை வெளிகளை நிரப்புகின்ற உங்கள் கவிதைகளை சிறியதாக அமைத்து அனுப்புங்கள் பிரசுரத்திற்கு இலகுவாயிருக்கும்

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் வருவானா..?

வானமே கீழிறங்கி விடுமோ என்று எண்ணத் தோன்றக்கூடிய வகையில மேகம் கறுத்து மழை அங்கொன்று இங்கொன்றாய்ப் பறந்து கொண்டிருக்க லெட்சுமியின் மனத்தில் வீட்டின் ஞாபகமே படமாகின இரண்டு நாட்களாய் தொடர்ந்த மழையால் அவளுடைய கொட்டில் வீட்டின் சுவர்கள் சரிந்து நிலம் ஊறி நித்திரைக்காய் அருகில் உள்ள பாடசாலைக்கு குடியேற வைத்து விட்டது. இன்னும் பெய்தால் அவளின் வீட்டின் வெள்ளம் தான் அதைவிட அவளின் இரண்டு பிள்ளைகளும் அவளின் வரவுக்காக படலையைப் பார்த்தபடியே இருக்க வழியெங்கும் கிடந்த தண்ணீரையும் சேற்றையும் நிதானமாய் கடந்து நடந்தவளை "என்ன லெட்சுமி இண்டைக்கு உங்கட சங்கத்தில் விசேசம் போல கிடக்கு" நிமிர்ந்தவள் முன்னால் மீன் பெட்டி கட்டிய சைக்கிளுடன் டேவிட் நின்றான். "ஓமண்ணை எங்கட அப்பள தொழிற்சாலை தொடங்கி இண்டைக்கு ஒரு வருஷம் அந்த விழாத்தான நடந்தது அவள் சொல்லி முடிக்க அவளின் அவசரம் அறிந்தவன் போல் சரி பிள்ள நானும் உதில சுந்தரத்தின்ர வீட்டில நிண்டு போட்டுத்தான் விடிய மழையைப் பார்த்து நாச்சிக்குடா போய் வரவேணும் அப்பவரட்டே" சொல்லிக்கொண்டே சைக்கிளை மிதிக்க அவளும் தலையாட்டிவிட்டு நடக்க ஆரம்பித்தாள். வடபுலத்தின் தானியக் களஞ்சியம் என்ற வர்ணனையைப் பெறும் கிளிநகரின் திருவையாறை சொந்த இடமாகக் கொண்ட அவள் பாடசாலை பருவத்திலே காதல் வசப்பட்டு கணேசை திருமணம் செய்து கொண்டாள் சமூகத்தை கூறுபோடும் சாதிய கொடுமை காரணமாய் இரு வீட்டிலும் எதிர்ப்புக் கிளம்ப அவர்கள் தனிக்குடித்தனம் நடாத்த வேண்டி ஏற்பட்ட போதும் தங்களை வெறுத்து ஒதுக்கிய சமூகத்தில தாங்கள் எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய வகையில் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற குறிக்கோளை இலட்சியமாக்கி தனது நண்பர்களின் ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் பொருளாதார ரீதியில் நடுத்தர நிலையை அடைந்து திருவையாறின் வாழை மரங்கள், தென்னை மரங்கள், பலா மரங்கள் போன்ற பயன்தரு மரங்களைக் கொண்ட ஓர் வளவில் சிறிய கல்வீட்டின் சொந்தக்காரர்கள் ஆனார்கள் சூரியக்கதிர் ஒன்று, சூரியக்கதிர் இரண்டின் போது யாழ்ப்பாணத்தில இருந்து வந்தவர்களை அன்புக்கரம் நீட்டி வரவேற்றுத் தன் வளவில் தனது தென்னை ஓலைகளைக் கொண்டே குடில்கள் அமைத்தும் கொடுத்ததோடு மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் என்பனவும் கொடுத்து மகிழ்ந்தவள், வாழ்வை சிதைக்கும் வகையில் அமைந்தது சத்ஜெய இராணுவ நடவடிக்கை யாழ் மாவட்ட மக்களோடு கிளி மாவட்ட மக்களும் கையில் கிடைத்த பொருட்களுடன் நடையாய் நடந்து கிளி நகர் விட்டு வேறு பகுதிகள் சென்ற வேளை கணேசும் அவளையும் இரண்டு பிள்ளைகளையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு அக்கராயன் பகுதி நோக்கி வந்தான் வந்தவர்க்கு வாழ்விடம் அமைத்துக் கொடுத்தவர்கள் தாங்கள் வாழ்வதற்கு எங்கே போவதென்று தெரியாத நிலையில் அக்கராயன் பிள்ளையார் கோவிலில் லெட்சுமியையும் பிள்ளைகளையும் இறக்கி விட்டு திருவையாறு நோக்கி செல்ல இவர்களுடைய வீட்டுப்பக்கம் எறிகணைகள் வீழ்ந்து வெடிப்பதாகவும் அப்பகுதிக்கு செல்ல முடியாதெனவும் அங்கு நின்ற காவல்துறை உறுப்பினர்கள் கூற ஏமாற்றத்துடன் திரும்பியவன் சில நாட்கள் ஆலயத்தில் தங்கி விட்டு பின்பு அக்கராயன் பகுதியில் ஓர் வளவில் சிறு கொட்டி

- சிறுகதை -

லமைத்து வாழ்க்கையை நகர்த்தினான் வீட்டை விட்டு வரும்போது வீட்டில கைவசம் இருந்த ரூபா பத்தாயிரத்தை எடுத்து வந்ததால் ஒரு வீடும் அமைத்து வீட்டிற்கு ஒரு சில சாமான்கள் வாங்கினதோடு அந்த ஒரு மாத சாப்பாட்டு செலவுயாக கையிலிருந்த பணம் முடிந்துபோக அவனோ விறகு வெட்டி வீடு வீடாக கொண்டுபோய் கொடுத்து அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு குடும்பத்தை வாழ வைத்தாலும் பொருட்களின் விலைவாசி உயர்வு காரணமாய் அவன் குடும்பத்திற்கு விறகு வியாபாரத்தால் கிடைக்கும் வருமானம் போதாமல் போக படிப்படியாக அவர்களின் வாழ்வு நிலை மிக மோசமடைந்த நேரத்தில் ஒரு நாள் "லெட்சுமி இருவையாறு பக்கத்தால் ஆமி உள்ள போயிற்றானாம் சனம் போய் தேங்காய் மாங்காய்' எல்லாம் கொண்டு வருகுதுகள் நானும் போய் வீட்ட ஏதன் கிடந்தா ஆஞ்சண்டு வரட்டே" அவன் சொல்லி முடிக்குமுன் வேண்டாம் என்று தடுக்க நினைத்தவள் காலையும் ஒன்றும் சமைக்கயில்லை போயிற்று வந்தா இரவுக்காவது சமைக்கலாம் என்ற நப்பாசை பற்றிக்கொள்ள மௌனமாகி விட்டாள "இஞ்சேரு லெட்சுமி இப்ப கிட்ட விறகும் இல்ல விறகு வேண்டிறசனமும் குறைஞ்சுபோயிற்று விறகு யாபாரிகள் தான் கூடிப்போற்று இப்பிடியே தெனம்பி இருந்தா குடல வத்தி சாகவேண்டியது தான்" சொல்லிக்கொண்டே சேட்டைப் போட்டுச் சைக்கிளை எடுக்க "அப்பா வீட்ட நானும் வாரட்டா" அது மூன்று வயது நிரம்பிய அவனின் மகன் சுஜனின் மழலை வார்த்தை ஒரு வயசில வீட்டை விட்டு வந்த உனக்கு வீட்டைப் பார்க்க வேணுமென்ற ஆசையெண்டா எனக்கு எவ்வளவு ஆசை இருக்கும் என்று மனதுக்குள் நினைத்தான் "தம்பி அம்மாவோட இருப்பானாம் அப்பா வீட்ட போயிற்று வரயிக்க சொக்காவும், பிக்காவும் வாங்கி வருவேராம் ஆய் குடுங்க ஆய் குடுங்க" மழலையுடன் முத்தப் பரிமாற்றத்தை நிகழ்த்திவிட்டு" அப்ப நான் போயிற்று வாறன் லெட்சுமி" சொன்னவன் சைக்கிளை எடுத்து வேகமாய் மிதிக்க அவளும் மகனுடன் வீட்டிற்குள் சென்றாள் மாலை 6.00 மணியானபோது தான் அவளின் மனம் படபடப்பு அதிகமாச்சு இவ்வளவு நேரம் என்ன செய்யிறோர் உதில கிடக்கிற திருவையாறு போயிற்று வாறதுக்கு படலயில நின்றபடி மனம் படாதபாடுபட பள்ளிக்கூடம் போயிற்று வந்த அவளின் மூத்த மகள் கேட்டாள் "அப்பா எங்கம்மா" எரிச்சல் ஏக்கமாய்மாற "வீட்டப்பாத்திட்டு வாறனெண்டு போனவர்" அவள் மகளுக்கு சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் சென்றுவிளக்கேற்றினாள் நேரமும் வேகமாய் ஓட அன்று இரவு அவனின் வருகைக்காக அவள் விழித்திருந்த போதும் விடிந்ததே தவிர அவன் தான் வரவில்லை விடிந்ததும் விடியாததுமாய் பிள்ளைகளைப் பக்கத்து வீட்டில் விட்டு விட்டு தனக்கு தெரிந்த சிலரிடம் ஓடிப்போய் விடயத்தைக்கூறி அவர்களோடாக முதல் நாள் கிளிநொச்சி சென்றுவந்த சிலரை சந்தித்துக்கதைத்தபோது அவர்கள் சொன்னதைக்கேட்க அவளுக்கு உலகமே இருண்டமாதிரி இருந்தது அவர்கள் கதைகளின் சில வார்த்தைகள் மட்டும் அவளின் காதில்பட்டும்படாமலும் வீழ்ந்தன "முருகேசன்ர நாங்கள் கனகபுரம் பக்கம் போன நாங்கள் திருவையாறு பக்கத்தால போன சில பேர் பிடிபட்டும் போயிற்றினம் மூன்று பேரை சுட்டுப்போட்டாங்கள் இரண்டு பேரை வெட்டிப்போட்டாங்கள் கன பேர் காயங்களோட ஓடி வந்தவை அவன் சொல்லி முடிக்க முன்னரே அவள் மயங்கி தரையில் சாய்ந்து விட்டாள் நினைவு வந்து பார்த்த போது இரண்டு பக்கமும் அவளின் இரண்டு பிள்ளைகளும் அழுதுகொண்டிருந்தார்கள் மூத்தவள் அப்பா எங்கயம்மா என்று அழுதாலும் சுஜனோ அப்பா சொக்கா எங்கென்று அழுத போது அங்கே கூடி நின்றவர்களும் அழுதே விட்டார்கள் உலகமே வெறுத்து உயிரை விட்டு விடலாம் என்று நினைத்தவள் கரங்களில் சுஜேந்தினியினதும் சுஜேந்திரனதும் கண்ணீர் துளிகள் பட்டபோது வாழ வேண்டுமென்ற முடிவுக்கு வந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக பலசிறைக்கூடங்களிலும் விசாரித்துஎங்காவதுஓரிடத்தில் இருந்து உயிருடன் வரமாட்டானா என்று எதிர்பார்த்திருக்கும் அவளின் வாழ்வுநிலை உணர்ந்து அந்தப்பகுதிக்குரிய கூட்டுறவுச் சங்கமொன்று தனது அப்பளத் தொழிற்சாலையில் அவளை வேலைக்கமர்த்தி

**காவலூரான்**

மாதம் ரூபா இரண்டாயிரம் சம்பளம் கொடுக்க மூன்று நேரத்தில் இரண்டு நேர சாப்பாட்டுடன அவளின் குடும்ப வாழ்க்கை ஓட அயலில் உள்ளபாக்கியமோ இப்படியே எத்தின நாளைக்கு பிள்ள உந்த செஞ்சிலுவை அது இது எண்டு திரியப்போறாய் செத்தவீட்டத்தான் செய்யாமல் விட்டிற்றாய் இப்ப துவஸ்சத்தையாவது செய்துபோடு" என்றாள் இண்டைக்கு இல்ல இனி எண்டைக்குமே திரும்பி வராட்டியும் அவனுடன் அவன் வாழ்கிறான் என்ற எண்ணத்தோடு வாழும் அவளின் வாழ்வு நிலையை இந்த சமூகம் எங்கே விளங்கப்போகிறது

இண்டைக்கு சங்கத்தில் கிடைத்த இந்த போனஸ்காசு இரண்டாயிரத்துக்கும் மழை வெளிச்சவுடன் ஓடுகுவாங்கி வீட்ட மேய்ந்து போடவேணும் எண்ட எண்ணத்தோடு வீட்டை அண்மித்த லெட்சுமிக்கு போரிடியே காத்திருந்தது அவளின் பத்து பதினைந்து ஓலைஎன்று சொல்வதற்கு ஒண்டுமில்லாத அந்த கொட்டில் வீடு மண்ணோடு மண்ணாக சாய்ந்திருக்க அவளின் குழந்தைகள் இரண்டும் அயல்வீட்டில் அழுதுகொண்டிருக்க அயல்வீட்டு வானொலியில் சோதனைமேல் சோதனை போதுமடா சாமி என்ற பாடல் ஒலிப்பது அவளின் காதில் சங்கமித்தது.

முற்று

# ஏன் வரவில்லை?

கிராமியச் சூழலிலிருந்து. அருகிலுள்ள நாற்றமடிக்கும் நகரப்புற வாசனையை நாடிச் சென்றுகொண்டிருந்தது அந்த அழகான சிறிய கிராமம்

ஆங்காங்கே தலை விரித்தாடும் அடர்ந்த மரங்களும், சிறு சிறு பற்றைகளும் பசுமையான கிராமிய சூழலை நினை நிறுத்திக் கொண்டிருந்தது

நகரப்புற மக்களும், கிராமப்புற மக்களும். அவர்களின் 'மூதாதைகள்" என வர்ணிக்கப்படும் "வானரக் கூட்டமும்" அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் காட்சிகள் வழமையான நிகழ்ச்சிகளாகும்

நாகரீக மாற்றம், விலைவாசி ஏற்றம் தகுதிக்கு ஏற்பட்ட எண்ணங்களின் இசைவுகளுக்கு உட்படாமல், மிகவும் சந்தோஷமாக வாழ்ந்துவரும் வானரக் கூட்டத்திலிருந்து சிறிது விலகி. நகரப்புற எல்லைக்கு ஓர் அடையாள அட்டையைக் கண்டு கொண்டது கு. ரங்கன் "வைத்திய அதிகாரி" என்ற பெயரும் அவனுடைய முகவரியும் காணப்பட்ட அந்த அட்டையிலிருந்த வாசகங்களை திரும்பத்திரும்ப பார்த்துக் கொண்டிருக்கும் போது. அதைத் தவறவிட்ட மனிதன் குரங்கை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

அதிர்ஷ்டத்துக்கான புன்சிரிப்பை உதட்டில் வரவழைத்துக் கொண்டு தனது அடையாள அட்டையைத் தரும்படி தன் கைகளை நீட்டினான்.

தன் இரு கைகளாலும் பண்புடனும் மரியாதையுடனும் அவனது அட்டையை திருப்பிக் கொடுத்த குரங்கினை அதிசயமாக பார்த்த மனிதன் அதனுடன் சிறிது பேச்சை கொடுத்து முதலில் சுகம் விசாரித்துக் கொண்டான்

**உருவகக் கதை - 02**

**வடவாணியூர் சி.சபா**

பின்னர் பேச்சுக்கள் படிப்படியாக எல்லாத் துறைகளுக்கும் பரவி "வாழ்வியல்" பற்றித் திரும்பியது

வாழ்வியல் பற்றி நீண்ட நேரம் உரையாடிய பின்னர் குரங்கும் மனிதனும் ஓர் விசித்திரமான முடிவுக்கு வந்தனர். அதாவது ஒரு மாதம் மனிதன் குரங்காகவும் குரங்கு மனிதனாகவும் மாறிவாழ்ந்து பார்க்க வேண்டும்என்பது தீர்மானமாயிற்று.

இந்த முடிவுக்கு குரங்கு சம்மதிக்க மறுப்புத் தெரிவித்தும், மனிதனின் வலுக்கட்டாயமான வற்புறுத்தலின் பேரில் சம்மதம் தெரிவித்துக் கொண்டது

இரு பகுதியினரும் ஒப்புக் கொண்டபடி ஒரு மாதத்தின் பின்னர் தைமாதம் முதலாம் திகதியிலே 8.00 மணிக்கு இதே இடத்தில் சந்திப்பதாக முடிவு செய்யப்பட்டது

கு. ரங்கன் என்னும் மனிதன் குரங்காகவும் குரங்கு "மனிதனாகவும்" மாறிக் கொண்டனர்

குரங்குக்கு நடைமுறைப் பிரச்சினைகள் இருக்குமென்பதினால் தனது அடையாள அட்டையையும் திருப்பிக் கொடுத்துவிட்டான் மனிதன்

இருவரும் சந்தோஷமாக இடம் மாறிக் கொண்டனர்.

ஒரு மாதம் முடிந்து விட்டது. மனித வாழ்வின் சுகத்தினை பல்லைக் கடித்துக்கொண்டு குரங்கு சமாளித்து விட்டது

'மானிடராகப் பிறத்தல் அரிது. என்ற ஔவையார் பாடிய பாடலின் அர்த்தம். குரங்குக்கு விளங்கவில்லை

தைமாதம் முதலாம் திகதி மு.ப. 8.00 மணி அதே இடத்தில் வந்து மனிதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது குரங்கு

மனிதன் வரவில்லை இரவு 8.00 மணிவரை எதிர்பார்த்தது மனிதனைக் காணவில்லை

2ம் திகதியும் காலை 8.00 மணியில் இருந்து இரவு 8.00 மணி வரை எதிர்பார்த்தது

ஆனால் மனிதன் வரவில்லை

கையில் வைத்திருந்த அடையாள அட்டையை திருப்பி திருப்பிப் பார்த்தது' நாற்புறமும் கண்களை சுழலவிட்ட குரங்குக்கு நன்றாக விளங்கிக் கொண்டது,

இனி அவன் வரமாட்டான், இனி அவன் வரமாட்டான் குரங்கின் உதடுகள் மெல்லமுணுமுணுத்தது.

தான் ஏமாற்றப்பட்டு விட்டதை எண்ணி எண்ணி குரங்கு கவலைப்பட்டபோதும் "தனது இனத்தின் வாழ்க்கையின் மகத்துவத்தை எண்ணி எண்ணி" பெருமிதப்பட்டது

மீண்டும் தான் பிறவி எடுக்க வேண்டிய ஓர் நிலை ஏற்பட்டால் தான் மீண்டும் "குரங்காகவே பிறக்க வேண்டும்" என மனதிற்குள் ஆண்டவனை வேண்டிக் கொண்டது.

## உப தபாலகம் திறக்குக

சிவநகர் உப தபாற் கந்தோர் சிவநகரிலேயே அமைக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை அரச அதிபரிடம் விடப்பட்டுள்ளது

தற்போது சிவநகர் பகுதியில் மக்கள் பெருமளவில் குடியேறியுள்ளதுடன், சிவநகர் பாடசாலை, சிவநகர் கூட்டுறவுச் சங்கக்கிளை என்பன அப்பகுதியிலேயே தற்போது இயங்குவதாலும் உப தபாற் கந்தோரினையும் அப்பகுதியில் அமைக்கும்படி மக்கள் கோரியுள்ளனர்

(அ-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதத்தின் கருவியாகும் புதிய -சுற்றாடல் கல்வி-

சிறிலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மூல நூலாக விளங்கும் 'மகாவம்சம்' இலங்கை வரலாற்றுக்கு ஆதாரச் சான்றாக பேரினவாத சிந்தனையாளர்களால் இன்னும் சுட்டிக் காட்டப்படுகிறது

ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாநாம தேரர் எனும் பௌத்த பிக்குவினால் எழுதப்பட்ட இச்சமய நூலில் இலங்கை என்பது புத்தபெருமானால் சிங்களவருக்காக பாதுகாக்கப்படும் நாடாகும் எனவும், சிங்களவரே இந் நாட்டின் சொந்தக் காரர்கள் எனவும் தமிழர்கள் எப்போதும் ஆக்கிரமிப்பாளர்களாகவே இருந்துள்ளார் எனவும், தமிழர்களின் படையெடுப்பால் புராதன சிங்கள பௌத்த நாகரீகம் சிதைக்கப்பட்டது எனவும் சிங்களவர் உயர்ந்த ஆரிய இனத்தைச் சார்ந்தோர் எனவும், தமிழர் திராவிட தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தோர் எனவும் தமிழர்களையும் ஏனைய இனக்குழுமத்தினரையும் ஆட்சி செய்யும் உரிமை சிங்களவருக்கே உண்டு என்பன போன்றவையே தொனிப் பொருளாக கொண்டு அமைந்துள்ளன

அண்மைக் காலம் வரை இக் கருத்தியலுக்கு எதிரான வரலாற்று ஆதாரங்கள் எதுவும் தமிழறிஞர்களால் சமர்ப்பிக்கப்படாதது எமது துரதிஸ்டமே. 1987 இல் கலாநிதி பொ. இரகுபதியினால் வெளியிடப்பட்ட Early settlements in Jaffna An Archaeological Survey எனும் ஆய்வு நூல் எழுதப்படும் வரை யாழ்ப்பாணத்தில் ஆதித்திராவிட மனிதர்களின் வாழ்க்கை 2500 வருடங்களுக்கு முன்பே இருந்தது காத்திரமாக வெளியிடப்படவில்லை

பின்னான காலங்களில் திரு. பா. புஸ்பரட்ணம் அவர்கள் தமது ஆய்வினூடாக பூநகரி ஆகிய பகுதிகளில் இடைக் கற்கால பண்பாட்டிற்குரிய மக்கள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் சான்றாக முதுமக்கள் சவத்தாழிகள் கிடைத்தமையை உறுதிப் படுத்துகின்றார். இம் முதுமக்கள் சவத்தாழிகள் பெரும்பாலும் அந்தகாலத்தில் ஏறக்குறைய கி.மு. ஆயிரம் வருடங்களில் தென்னிந்தியாவில் திருநெல்வேலிப் பகுதியில் ஆதிச்சநல்லூர். தோனி. எனும் இடங்களில் காணப்பட்டதை ஒத்திருந்தது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தொல்லியல் சான்றுகள் பொம்பரிப்பு மாந்தை பூநகரி, வவுனியா. மாங்குளம், முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு கதிரொளி திசைமாறமவும். கந்தரோடை வல்லிபுரம், ஆனைக்கோட்டை. ஆகிய பகுதிகளிலும் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மகாவம்சத்தில் கலிங்க முடியாதபட விஜயனின் வருகையின் போது இலங்கை தீவில். இயக்கர். நாகர். வேடர் இன மக்கள் வாழ்ந்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது, உண்மையில் இவர்கள் ஆதி திராவிடக் குடியினரே (இவர்களில் இயக்கர் என்பது இவற்றை வழிபாடு உடையவர் என்பதனையும். நாகர் என்பது நாக வழிபாடு உடையவர்கள் என்பதனையும், வரலாற்று ஆசிரியர் திரு. சேனநாதன் தமது கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இவர்களில் நாகர்களின் மேலாதிக்கம் கி.மு. 274 தொடக்கம் 1600 வரை இலங்கை, வட இந்தியா போன்றவற்றிலும் இருந்தது என தெரிவிக்கப்படுகிறது. (Oriental studies 1881) இதே போன்று கி.மு 600 ஆண்டளவில் நாக இராட்சியத்தின் தலைநகர் களனியில் அமைந்திருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது, (Taprobanian Vol 11 partiv 1887) கி.பி. 87 – 150 இல் நாகதீபம் என்பது யாழ்ப்பாணத்தில் இருந்து மாணிக்க கங்கை வரை திருகோணமலை, மகாவலி மட்டக்களப்பு கல்லோயா எங்கும் பரந்திருந்ததாக Cloudius ptolemy,s Taparabone இல் குறிக்கப்பட்டுள்ளது

அவ்வாறு பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளில் நாக இயக்கர்களின் அரச அமைப்புகள் நாகரீகமுடையவையாகவும், வளமுடையவையாகவும் குறிப்பிடப்பட்டுள்ள போதும் மகாவம்சம் இவர்களை நாகரீகமற்றவர்கள் காட்டுமிராண்டிகள் எனத் திரிபுபடுத்தித் தெரிவித்துள்ளது.

இதனை இலங்கையின் வரலாற்றை ஆராய்ந்த பலரும் அப்படியே ஏற்றுக் கொண்டமை எமது வரலாற்றின் துரதிஸ்டமாகும். உண்மையில் இயக்கர்நாகர் எனப்போர் நாகரீக வாழ்வுமுறையுடைய ஓர் ஆதித்திராவிட சமூகம் என்பது பௌத்த பேரினவாதத்தால் மறைக்கப்பட்ட பகுதியாகும்,

ஆயினும் நேர்மையான ஒரு சில வரலாற்றாசிரியர்கள் இவ்வுண்மையை ஏற்றுக் கொண்டு சான்று பகர்ந்துள்ளனர், இவர்களில் K.M.D. சில்வா. எஸ். குணதிலக எஸ். தெரணியகல ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

சிங்கள பௌத்த பேரினவாதிகள் மகாவம்சத்தை மூலாதார வரலாற்று நூலாக அறிமுகம் செய்து கொண்டே மகாவம்சத்தில் காணப்பட்ட ஆதித்திராவிட மூதாதையரின் வாழ்க்கை பற்றிய விடயங்களை, தமிழர் சார்பான விடயங்களை மறைத்து பேரினவாதச் சிந்தனையுடன் புதிய வரலாற்று பாடங்களை ஆண்டு ஆறுக்கென உருவாக்கப்பட்ட சுற்றாடல் கல்விப் புத்தகத்தில் திணித்துள்ளனர், 27 பேரைக் கொண்ட இப் புத்தக ஆக்கக் குழுவில் ஒருவர் கூட தமிழராகவோ அல்லது முஸ்லீமாகவோ இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் பாந்தாமன் என்பவரின் கட்டுரை தெரிவிக்கிறது.

(அ அ)

# கிளிநொச்சி வலய உடற்பயிற்சிப் போட்டி

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது 16 பாடசாலைகளின் உடற்பயிற்சிக் குழுவினரும் அக்கராயன் ம.வி பாண்ட் 'இசை'க்குழுவினரின் பாண்ட் இசையுடன் ஒத்திசைவாக அணிவகுத்து கம்பீரமாக செல்கின்றனர் பல்வேறு கோல உடைகளுடன் காணப்பட்ட இவர்களின் அணிவகுப்பு உண்மையிலேயே பார்வையாளருக்கு கண்கொள்ளாக் காட்சியாகவே இருந்தது அணிநடைமரியாதை முடிவடைந்ததுடன் உடனடியாகவே பரிசளிப்பு நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு ப. அரியரத்தினம் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது

நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு எளிமையான முறையில் குறித்த நேரத்தின்படி நடைபெற்று முடிந்த இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளரும், யாழ்- பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியருமான திரு பத்மநாதன் அவர்கள் வருகைதந்திருந்தார்.

அவருடைய பிரதம விருந்தினர் உரையில் இன்றைய நிகழ்வில் இடம்பெற்ற அனைத்து உடற்பயிற்சிக் குழுக்களின் வெளிப்பாட்டில் நேர்த்தியான ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு. சீருடைகள், ஒத்திசைவு தன்னம்பிக்கை ஒருங்கிணைவு என்பன காணப்பட்டதையிட்டு தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்

அதேவேளை உடற்கல்வி பாட விதானத்துக்கமைவாக ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் செயல்முறை வடிவமே இவ்வுடற்பயிற்சி நிகழ்வாகும் இதன் மூலமாக நடைமுறை சார்ந்த செயல்முறைக்கல்வி மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையைச் செழுமைப்படுத்தும் எனவும் தெரிவித்தார்

அவருடைய உரையைத் தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது

15 வயதின் கீழ் பிரிவு ஆண்களுக்கான போட்டிகளில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி முதலிடத்தையும். செல்லையாதீவு அ.த.க பாடசாலை இரண்டாம் இடத்தினையும், வட்டக்கச்சி ம.வி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது இதே போன்று பெண்கள் பிரிவில் அக்கராயன் ம.வி முதலிடத்தையும், வட்டக்கச்சி ம.வி இரண்டாம் இடத்தையும் ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன

17 வயதின் கீழ் ஆண்களுக்கான போட்டியில் கோணாவில் அக்கராயன் அ.த.க பாடசாலை முதலிடத்தையும், அக்கராயன் ம.வி இரண்டாம் இடத்தையும் முழங்காவில் ம.வி மூன்றாம் இடத்தையும் பெற்றன இதே போன்று பெண்களுக்கான போட்டிகளில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை முதலிடத்தையும், வட்டக்கச்சி ம.வி இரண்டாம் இடத்தினையும், கிளிநொச்சி ம.வி மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன

19 வயதுக்கீழ்ப் பிரிவில் ஆண்களுக்கான போட்டியில் வட்டக்கச்சி ம.வி முதலிடத்தினையும். அக்கராயன் ம.வி இரண்டாம் இடத்தையும், இராமநாதபுரம் ம.வி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. பெண்களுக்கான பிரிவில் மத்தியகல்லூரி முதலிடத்தையும். அக்கராயன் ம.வி இரண்டாம் இடத்தையும், முரசுமோட்டை முருகானந்த ம.வி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது

இதேவேளை, பார்வையாளர் மத்தியில் இருந்து, வயதுப் பிரிவுக்கிசைவான உடற்பயிற்சிகளையும் கொண்டிருக்காமையும், இவைகள் தொடர்பில் குதிக்கரணம் (Diving) மற்றும் சட்டப்பயிற்சிகள் (Bar Exercises) என்பன இப் போட்டிகளில் தசைத்திறன் -(Gymnastics) விளையாட்டாக கருதப்படுத்தப்பட்டிருந்தது வெற்றியில் அவற்றிற்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது. எனினும் கடந்த காலங்களைவிட மாணவர்களின் ஆக்க வெளிப்பாடு அதிகரித்துக் காணப்பட்டமையை பலரும் பாராட்டியிருந்தனர். (ஆர்)

## அதிகரித்த நெல் சூடடிக்கும் கருவிப் பாவனை

கையால் அல்லது. இருசில்லு உழவுயந்திரம் வாண்ட் மாஸ்ரர் உதவியுடன் சூடடிக்கும் இயந்திரத்தின் பாவனை இம்முறை அதிக அளவில் ஸ்கந்தபுரம். அக்கராயன் பகுதிகளில் காணப்பட்டது

எரிபொருளின் அதிகரித்த விலையேற்றம், பருவ மழையின் பாதிப்பினால் விளைச்சலில் ஏற்பட்ட பாதிப்பு வீழ்ச்சியடைந்துள்ள நெல்லின் சந்தை விலை என்பனவே மலிவான கூலியில் மாற்றுவழியாக இச் சூடடிக்கும் இயந்திரப் பாவனையை அதிகரித்தது.

இதேவேளை இச் சூடடிக்கும் கருவி தற்போது தனியார் வசம் மட்டுமே காணப்படுவதால், ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் பெற்று மலிவான கூலியில் வாடகைக்கு விட்டால் அங்கத்தவர்க்கும் பொது மக்களுக்கும் மிகுந்த பயனளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ - அ)

# வீட்டுணவும் பாதுகாப்பு மிக மிக அவசியமாகும்

எமது பாரம்பரிய சமையல் முறைகள் போசாக்குத் திட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை உடையவை எனினும் நாம் தற்போது அவற்றையும் கைக்கொள்ளுவது இல்லை நவீன அறிவியல் முறைகளையும் கைக்கொள்ளுவது இல்லை இதனாலேயே நெருக்கடியான இன்றைய காலகட்டத்தில் போசாக்குக் குறைபாட்டினால் நாம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளோம் என உணவுத் தொழில்நுட்பவியலாளர் திரு நகுலேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்,

சுகாதார சேவைகள் அலுவலர் திணைக்களத்தினால் யூனிபன்குளம் ஸ்கந்தபுரம் இரண்டாம்வாய்க்கால் ஆகிய பகுதிகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட மகளிருக்கான எமது சூழலில் இருந்து மலிவாகக் கிடைக்கும் உணவுப் பொருட்களில் இருந்து அதிக போசாக்குப் பயன்பாட்டை பெறுவதற்காக வழங்கப்படும் கருத்தரங்கு தொடர்பாக தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது கிராமிய மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள போசாக்குக் கல்வி தொடர்பான கருத்தமர்வுகளை வெளிநாட்டு அரசசாரா நிறுவனங்களும் அதிக அக்கறைகாட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பாக 'ஒக்ஸ்பாம்' இதற்கான வேலைத்திட்டத்தில் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்வு வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை இதன் காரணமான தொழிலின்மை என்பன மக்களிடையே உற்பத்தி பகிர்வு என்பவற்றில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் போசாக்கின்மை ஏற்பட்டு பல்வேறு வகையான உடலி, உள, பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதனையும் அவர் சுட்டிக் காட்டினார்.

Physical weakness என்பது இப்பிராந்திய மக்கள் அனைவரிடையேயும் காணப்படுவதைச் சுட்டிக் காட்டிய அவர் வீட்டுணவுப் பாதுகாப்பு என்பது பேணப்படுவதன் அவசியத்தையும் தெரிவித்திருந்தார் வீட்டுணவுப் பாதுகாப்பில் வர்த்தகக் கொள்வனவுத்திறன் மிகக் குறைவடைந்துள்ள இந்நிலையில் வீட்டுணவு ஒவ்வொருவராலும் சிறிய அளவிலேனும் சுய உற்பத்தி மூலம் உற்பத்தி செய்யப்படுவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்

வீட்டுணவு உற்பத்தி தொடர்பாக தொண்டர் நிறுவனங்கள் அதிக அக்கறை கொள்ள வேண்டும் எனவும் குறிப்பாக பாடசாலை செல்லாச் சிறுவர்கள் கர்ப்பிணித் தாய்மார் பாலூட்டும் தாய்மார் ஆகியோரின் போசாக்குச் சம்பந்தமாக அதிக அக்கறை எடுக்க வேண்டியது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(அ-அ)

## மாணவர் பயிற்சி

யுத்தபாதிப்பினுள் வாழ்நிலை கொண்ட மக்கள் வாழும் நாட்டில் அனைவருமே யுத்தத்தின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடியவர்களாகத் திகழவேண்டியது அவசியமாகும்

இதனடிப்படையிலேயே மாணவர்களாகிய நீங்கள் உங்களை உடல் ரீதியாக வலுவுள்ளவர்களாகவும், விவேகமுள்ளவர்களாகவும் துணிவுள்ளவர்களாகவும் மாற்றிக் கொள்வதற்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என திரு எழிலன். திரு இளஞ்சேரன் ஆகியோர் மாணவர்க்கான பயிற்சி ஆரம்ப நிகழ்வில் தெரிவித்தனர்.

(அ அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடறிவோம் நாமு

## பெரு

### 2000 ஆண்டளவில் 100 தொன் தங்கம் உற்பத்தி இலக்கு

தலைநகர்:- லீமா
பரப்பளவு: 12,81215ச கி.மீ
மக்கள் தொகை 2 கோடி 32 இலட்சம்
மொழி; ஸ்பானிஸ், குவச்வா
சமயம்; கிருத்தவம்
நாணயம்: சோல்
எழுத்தறிவு: 85%
பெண் தொழிலாளர் 28%
நகர மக்கள் தொகை 72%
பாதுகாப்பான குடிநீர் பெறுவோர் } 58%
சராசரி ஆயுள் 65%

நீண்ட காலம் ஸ்பானியரின் ஆதிக்கத்தில் இருந்தது. 1824 இல் விடுதலை பெற்றது.

1968 இல் இருந்து 1980 வரை இராணுவ ஆட்சி நீடித்தது

1980 இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் மக்களாட்சிக்கு வழி வகுத்தது.

தற்போது இருசபை பாராளுமன்ற ஆட்சிமுறை நடைபெற்று வருகிறது. கம்பளி, பருத்தி, சீனி பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது

வெள்ளி, செப்பு, தங்கம் முக்கிய ஏற்றுமதி

மீன்பிடி மிகப்பெரியளவில் விருத்தியடைந்துள்ளது.

தங்க உற்பத்தியில் பல்நாடுகளுடன் ஒப்பிடுகையில் பெரு குறிப்பிடத்தக்க இடத்தில் உள்ளது.

கடந்த 5 வருடங்களில் மட்டும் தங்க உற்பத்தியில் 85 சதவீதம் அதிகரித்துள்ளது.

1995 இல் நாட்டின் தங்க உற்பத்தி 56 தொன் ஆகும்

பெருவின் முக்கிய ஏற்றுமதிகளான செம்பு, மற்றும் மீன் உணவிற்கு அடுத்தபடியாக தங்கம் பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது

கி. பி 2000ம் ஆண்டளவில் 100 மெட்ரிக்தொன் தங்கம் உற்பத்தி இலக்கு.

இச்சாதனை எட்டப் பட்டால் இலத்தீன் அமெரிக்காவில் மிகப்பெரிய உற்பத்தியாளர் என்ற தகுதியை பெரு பெற்றுவிடும்.

இலத்தீன் அமெரிக்காவில் முதலிடத்தில் இருப்பது பிரேசில் ஆகும்


உலகளவில் பிரேசிலுக்கு 12ம் இடம்

தொகுப்பு,
கிருஸ்ணா

## 'சங்கமம்' குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 8

பெயர் ...........................................

முகவரி ...........................................




### இடமிருந்து வலம்

1 கோயில் என்றால் சிறப்பாக குறிக்கப்படும் தலம்.
2 இதை சிலர் பொழுது போக்காக சொல்வர் திரைப்படத்தை இப்படியும் அழைப்பர்.
15. கத்தியை தீட்டாதே இதை தீட்டு என்பர் குழம்பியுள்ளது,
17. நவராத்திரி விரதத்தை தொடர்ந்து அனுஷ்டிக்கப்படும் விரதம் இந்த விரதம் எனப்படும்.
25 அழகில் சிறந்தவள்
31 'கற்பனைக் கோட்டை கட்டி' என அழைக்கப்படுபவர் 'காதல் கோட்டை' படத்தின் இயக்குனர் குழம்பியுள்ளார்.

### மேலிருந்து கீழ்

1, சில வருடங்களுக்கு முன் வரை யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருந்த நகைச்சுவை சஞ்சிகை,
3. இதை விற்கச் சென்றே கோவலன் கொலையுண்டான் குழம்பியுள்ளது.
4. வெயில் என்றால் புழுக்கம்! இது கொட்டினால் கடும் குளிரை உணரலாம்
5 முருகனை முழு முதலாகக் கொண்ட மதம் தலைகீழாகி குழம்பியுள்ளது:
26. வேகம் தலைகீழாகியுள்ளது:
28. சிறையிருப்பவர் இப்படி அழைக்கப்படுவர்;
30. இது உதவுவது போல் அண்ணன் தம்பி உதவாது என்பர் தலைகீழாகியுள்ளது.

முடிவுத் திகதி, 20-04-99

தயாரிப்பு:- V K காந்தன்

### இல - 6

#### பரிசு பெற்றோர்

1. ச. சிவராஜன் இல 23 ஸ்கந்தபுரம்.
2. ம யூலியன் அக்கராயன் ப. நோ. கூ. சங்கம்
3 எஸ் இரத்தினம் தமிழீழ நிர்வாக சேவை வவுனியா மாவட்ட மல்லாவி.

# மாசிக் கருவாடு தயாரிப்பது எப்படி

இன்றைய பொருளாதார நெருக்கடியில பாதிப்புக்குள்ளாகியுள்ள எமது சமுதாயம் சுய சார்புப் பொருளாதாரத்தை வேண்டி தடம் பதிக்கிறது

பெருந்தொகை செலவின்றி வீண்கால தாமதமின்றி அள்ள அள்ளக் குறையாத இயற்கை வளமாக தமிழீழத்தில் கடல் வளம் உண்டு எமது தேசத்தின் 3 2 பங்கினை அதுமுத்தமிட்டு நிற்கின்றது ஸ்ரீலங்கா அரசின் கடற்றொழில் சார் உபகரணங்களிற்கான தடைகள் போன்றவற்றால் கடற்தொழிலும் அதன் தொழில் நுட்பமும் பெரும் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளன எது எவ்வாறிருப்பினும் எமது கடல் வளத்திலிருந்து அந்நிய தேசத்தை நோக்கி ஏற்றுமதிகள் நடைபெறுக்கொண்டு தானிருக்கின்றது. அந்நிய தேசம் முதல் தமிழீழத்தின் கிராம மட்டங்கள் வரை விரும்பி உண்ணும் உணவு வகைகளுள் மாசிக் கருவாடும் ஒன்று.

மாசிக் கருவாடு தயாரிக்கப் பயன் படுத்தப்படும் மீனினம் பலயா என்று அழைக்கப்படும் சூரை மீன் ஆகும்.

★ 01 கிலோ கிராம் மாசிக் கருவாடு தயாரிக்க தேவைப்படும் மீனின் அளவு 04 கிலோ கிராம் ஆகும்

1) மீனை நன்றாகக் கழுவி தலையையும் வாலையும் வெட்டிய பின்னர் பெரிய பாத்திர மொன்றில் நீர்விட்டு மீனை அவிய வைத்தல் வேண்டும்

2) அவித்த மீனை துப்பரவான துணியின் உதவியுடன் நீரையும் மீனையும் வேறாக்கல் வேண்டும்

3) முட்டைகளையும் குடல்களையும் வேறாக்கிய பின்னர் மீனை நீளப்பாடாக நான்கு ஐந்து துண்டுகளாக வெட்டவும் இம் மீன் துண்டுகளின் மேல் சாம்பலைப் பூசி அடுப்புத்தணலில் வேக வைத்தல் வேண்டும் வேகியதன் பின்னர் மூன்று தொடக்கம் நான்கு நாட்களிற்கு வெய்யிலில் மீன் நன்கு காயும்வரை விடவும்

இப்பொழுது மாசிக் கருவாடு தயார் நீண்ட நாட்கள் சேமித்து வைக்கக் கூடியதும் சிறுவர் முதல் பெரியோர் வரை சுவைத்து உண்ணக் கூடியதுமான இத்தயாரிப்பை உங்கள் வீடுகளிலேயே மேற்கொள்ளுங்கள்

றெஜினோல்ட்
நன்றி; ஆதாரம் சஞ்சிகை
த பொ. மே. நிறுவனம்

## அறிவுக் களம்

### விந்தைச் செய்தி

அமெரிக்காவில் இளைஞன் ஒருவர் காதலித்து திருமணம் செய்துகொண்டார் 'இளைஞன் காதலித்து திருமணம் செய்வதில் என்ன விந்தை? இதற்காக அமெரிக்கா வரை போகவேண்டுமாஎன எண்ணுகிறீர்களா? அதில்தான் விவகாரமே இருக்கின்றது

அந்த இளைஞன் காதலித்து மணந்துகொண்டது ஒரு பெண்ணையல்ல தனது வயதையொத்த ஒரு ஆணை

எத்தனையோ மறுப்புகள் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கோர்ட்டில வழக்காடி இந்த அதிசய திருமணம் நடந்தேறி உள்ளது

இளைஞர் இருவரும் மனம் கவர்ந்த துணையை அடைவதற்கு உதவிய கடவுளுக்கு நன்றி தெரிவித்தவராம தற்போது இவர்கள் மகிழ்ச்சிகரமாக 'குடித்தனம்' நடாத்தி வருகின்றனராம்

## சிரிப்பு...

ஒரு ஓவியக் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது, மக்கள் கூட்டம் அலை மோதியது இடையே பெரிய மனிதரான அந்த ஊரின் தலைவர் கண்காட்சியை பார்வையிட வருகை தந்தார்.

ஒவ்வொரு ஓவியமாகப் பார்வையிட்டு வந்த அத்தலைவர் அவற்றைப்பற்றிய தனது விமர்சன கருத்துக்களை கூறிக் கொண்டே வந்தார்,

திடீரென ஒரு ஓவியத்தின் முன்னால் தலைவர் நின்றார் அவரின் முகம் கடுகடுப்பாகியது கன்னம் கொவ்வைப்பழம் போல சிவந்தன "எத்தனை அவலட்சணமான ஓவியம் இது இதைஏன் இங்கு வைத்திருக்கின்றீர்கள் பார்க்கவே சகிக்கவில்லை அவ்வளவு கோரமாக உள்ளது. உடனே இதை அப்புறப்படுத்துங்கள்" என கோபத்துடன் கத்தினார் அத்தலைவர்.

அப்போது "ஐயா அது ஓவியம் அல்ல முகம் பார்க்கும் கண்ணாடி" என்று அயலில் இருந்து ஒரு குரல் ஒலித்தது.

V K. காந்தன்

## உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக மாறிவரும் போதைப் பொருள் பாவனை

உலக அமைதிக்கும், மனித சுகாதாரத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறிவரும் போதைப பொருள் பாவனை பற்றி ஐக்கிய நாடுகள் சபை போதைப் பொருள் கட்டுப் பாட்டுச் சபை, கவலை வெளியிட்டுள்ளது

வெளிநாட்டு சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரும் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையினால் வன்முறைப் போக்கு மேலோங்கிவருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

1999 ஜனவரியில் 166 அங்கத்துவ நாடுகள் ஒன்று கூடி ஐ. நா போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபையில் போதைப் பொருள் பாவனை தடுப்பு சம்பந்தமாக ஆராய்ந்தனர்.

1909 இல் ஐ.நா போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை சங்காய் நகரில் நிறுவப்பட்டது.

1912 இல் அங்கத்துவ நாடுகள் ஒன்றிணைந்து முறைப்படி செயற்பாட்டை துவங்கியது

1964 இல் கூடிய சபை தனது பழைய கருத்துக்கள் அனைத்தையும் ரத்துச் செய்து விட்டு புதிய யாப்பை தயாரித்து நடைமுறைப் படுத்தி வருகிறது,

1999 ஜனவரியில் கூடிய ஐ. நா போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபையில் 166 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

## பிணைப்பணம் அறவீடு

அவுஸ்திரேலியாவிற்கு வருகைதரும் உல்லாசப்பயணிகளிடமிருந்து பிணைப்பணம் அறவிடசட்டமூலம் கொண்டு வரப்படுகிறது என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிலிப்பெற் அறிவித்துள்ளார்

## வங்கிகளில் 2000 ம் ஆண்டளவில் கம்பியூட்டர் மயம்

பன்னாட்டு வர்த்தக வங்கிகளில் 2000 ஆண்டளவில் அதன் செயற்பாடுகள் அனைத்தையும் முழுமையாக கம்பியூட்டர் மயப்படுத்த உலக கம்பியூட்டர் தொழில் கழகமன்றம் உதவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## கணிப் பொறியில் சுற்றுச் சூழல் செய்திகள்

சுற்றுச் சூழல் சிக்கல்களில் அக்கறை கொண்ட அனைவருக்கும் உதவக்கூடிய கணிப்பொறி நினைவுப் பதிப்பான் CDRom ஒன்றை ஃபிரெஞ்சு உயிரின மண்டலக் கழகம் ஒன்று தயாரித்துள்ளது இதில் பல்லாயிரம் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட சுருக்கமான தகவல்கள் 3000 பக்கங்களில் அடக்கப்பட்டுள்ளன. அத்துடன் 1500 முகவரிகளும் இடம் பெற்றுள்ளன இவை குறிப்புச் சொற்களின் அகவரிசையில் அமைந்துள்ளன, இவற்றில் 80% ஆங்கிலத்தில் உள்ளது,

தொடர்பு முகவரி
A.D M E 89, rue Pouchet, 75017 Paris. France, Fax: (33) (0) 42633462
E moil; Info a adme asso fr;
Web-Sik; http: llwww adme asso. fr.

## மறைந்து வரும் நீர் நிலம் வாழ் பிராணிகள்

உலகின் எல்லாப் பகுதிகளிலும் தவளைகளும் தேரைகளும் சலாமண்டர் என்ற பல்லியினப் பிராணிகளும் மறைந்து கொண்டு வருகின்றன நிலத்திலும் நீரிலும் வாழும் இந்த இனங்கள் பலியாவதற்குக் காரணங்கள்: ஈர நிலங்கள் வரண்டு போவதும் வேட்டையாடி உண்ணும் அயல் விலங்குகள் கொண்டு வரப்பட்டதும் ஆகும். பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலும அவை குறைந்து வருகின்றன அத்துடன் இந்த மூன்று வகைப் பிராணிகளிலும் பிறவி உரித்திரிபுகள் அதிகரித்துள்ளன.

அமிலமழை புற ஊதா B கதிரியக்கம் போன்றவையும் இதற்குக் காரணங்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் ஐயுறுகிறார்கள் இந்தக் கதிரியக்கம் இப்போது குறைந்துவரும் ஓசோன் படுகையிலும் எளிதாக ஊடுருவிவருகிறது, பூச்சி மருந்துகள் இன்னொரு காரணம் காலங்கடப்பதற்கு முன்புதவளைகள் என்ன ஆகின்றன என்பதை அறிந்து கொள்ள உலகெங்கும் 500 விஞ்ஞானிகள் குழுக்கள் ஆராய்ச்சி நடத்தி வருகின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுத் தலைமைக்கு நீண்ட இடைவெளிக்குப் பின் கௌரவம்

### கூட்டுறவாளருடன் இணைந்து சங்கமமும் பாராட்டுகிறது

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. திருநாவுக்கரசு சுந்தரலிங்கம் அவர்களின் 20 வருட 'கூட்டுறவுச் சேவையைப் பாராட்டி சங்கப் பணியாளர்களால் கௌரவிக்கப்பட்ட விழாவில் சங்க அங்கத்தவர்களின் சார்பில் வழங்கப்பட்ட பாராட்டு உரை

கடந்த இரண்டு தசாப்த காலங்களாகக் கூட்டுறவுச் சேவையில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிக் கொண்டிருக்கும் எமது சங்கத் தலைவர் தம்பி சுந்தரலிங்கம் அவர்கள் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவருடன் பழகிய அனுபவத்திலும் ஏற்கனவே பலராலும் பாராட்டப்பட்ட சம்பவங்கள் சிலவற்றையும் இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

எமது கூட்டுறவுச் சங்கம் தகுந்த வழிகாட்டல்கள் இன்றிப் போதிய வருவாயுமின்றிப் பணியாளர்கள் ஊதியம் பெறுவதற்கே மிகவும் சிரமப்பட்ட வேளையில் நிர்வாக உறுப்பினராகவும், உபதலைவராகவும், தலைவராகவும் இருந்து தனது அயரா முயற்சியால் ஊழல் அற்ற ஏனைய கூட்டுறவாளர்களால் போற்றத் தகுந்த விதத்தில் யாழ்மாவட்டத்தில் அமைந்துள்ள 22 சங்கங்களின் முன்மாதிரிச் சங்கங்களில் ஒன்றாக எமது சங்கம் மிளிர வழி வகுத்த பெருமை எமது கூட்டுறவாளர் தம்பி சுந்தரலிங்கம் அவர்களையே சாரும்.

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலும் எண்பதுகளில் இப்போராட்டம் பல வழிகளிலும் முன்னெடுத்துச் செல்லப் பட்டபோதும் கொடூரமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்காலம் வரை கூட்டுறவுச் சேவையில் மட்டுமல்ல இயல், இசை நாடக உலகில் காலத்தின் தேவையறிந்து எமது மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகத் தனது வேலைப் பளுக்களின் மத்தியிலும் தொடர்ந்து சேவையாற்றி வருபவர் என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

இந்திய இராணுவம் தமிழ் மூத்தில் தனது ஆக்கிரமிப்புக் கரங்களைப் பதித்து வைத்திருந்த நாட்களில் தனது ஆருயிர்ச் சகோதரனின் உயிர் துரோகக் கும்பல்களின் சதிச் செயலால் அநியாயமாகப் பறிக்கப்பட்டபோதும் தளராத உறுதியோடும் வேகத்தோடும் தனது சேவைகளைத் தொடர்ந்து ஆற்றி வந்தவர்.

இப்போராட்ட மண்ணை விட்டு அந்நிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து போக வசதியிருந்தும் தனது சகோதரர்களினது ஆவலைப் பூர்த்தி செய்யாமலும் தான்கொண்ட கொள்கையையும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பாரிய பொறுப்பையும் இடை நடுவே விட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தொடர்ந்தும் சேவையாற்றி வரும் இக் கூட்டுறவாளரினைப் பாராட்டாமல் இருக்க முடியாது

'ரிவிரச' இராணுவநடவடிக்கையின் பின் சாவகச்சேரியில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் மாநாட்டில் தீர்க்க தரிசனமாக யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த சங்கங்கள் வன்னிப் பெரு நிலப்பரப்பில் தனது கடமைகளை ஆற்ற வேண்டும் எனக் கோரி அதனைச் செயலிலும் காட்டி முதன் முதலில் எமது சங்கக் கரைச்சி ப. நோ. கூ. சங்கத்தின் உதவியோடு வன்னியில் சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்த பெருமையும் எமது தலைவரையே சாரும்.

எமது தலைவரின் திறந்த மனதும், நேரிய நடவடிக்கைகளையும் உணர்ந்த கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் அக்கராயன் ப. நோ. கூ. சங்க நிர்வாகமும் பொதுமுகாமையாளர்களும், பணியாளர்களும் தமது எல்லைப் பரப்பில் சேவையாற்றுமாறு நாம் வன்னிக்கு இடம்பெயர்ந்து வந்த போது சங்கப் புனரமைப்புக் கூட்டத்தில் எம்மை வரவேற்றதனை நாம் இக்கட்டத்தில் நன்றியுடன் நினைவு கூருவோம்.

தற்போது சங்க விதிகட்டு முரணாக இரண்டு சங்கங்கள் ஊர்காவற்றுறையிலும், கிளிநொச்சியிலும் இயங்க முடியாது எனக் கருதி கிளி/ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் என்ற பெயரில் சுமார் இருநூறு பேருக்கு பேற்பட்ட பொதுச்சபை ஒன்றைக் கூட்டி முதன் முதலில் கிளிநொச்சியில் அமைத்த பெருமையும் எமது சங்கத் தலைவரையே சாரும்.

எமது சங்கம் எமது தமிழர் போராட்ட வாழ்வில் பத்துக்கு மேற்பட்ட இடப்பெயர்வுகளைச் சந்தித்த போதெல்லாம் மன உறுதியோடு பணியாளர்களின் துணையோடும் இழப்புக்களின் மத்தியில் செயற்பட்டு எமது சங்கத்தைத் தொடர்ந்து நடாத்தும் வல்லமை மிக்க தலைவரையே நாம் இங்கு காண்கின்றோம்

எமது தலைவர் என்றும் வளமுடனும், நலமுடனும் வாழ வாழ்த்துகிறோம்

## தலைவர் தி. சுந்தரலிங்கம் அவர்களின் கூட்டுறவுச் சேவைக்குப் பாராட்டு



கிளி ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முதலாமாண்டு நிறைவுவிழா கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த வேளை அதன் தலைவர் தி. சுந்தரலிங்கம் அவர்களின் இரண்டு தசாப்தகால கூட்டுறவு சேவையைப் பாராட்டு விழா அரங்கு தயாராகிக்கொண்டிருந்தது

கண்களைப் பறிக்கும் வண்ணங்களுடன் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் தலைவர் தி சுந்தரலிங்கம் அவர்களும், அவர்தம் பாரியாரும் அமர்ந்திருந்தார்கள் அவரைச் சூழ அரச உயர் அதிகாரிகளும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும், பொது முகாமையாளர்களும் வீற்றிருந்தார்கள்,

சபையோருக்கென விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் கூட்டுறவுப் பிரமுகர்கள் கூட்டுறவாளர்கள் கூட்டுறவுப் பணியாளர்கள், அதிதிதவர்கள் என பலதரப்பினரும் வீற்றிருந்து சபையை அழகுபடுத்தினர்

அரங்கில் கம்பீரமாக அமர்ந்திருந்த ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர் தொழிற்சங்க தலைவர் திரு தெணிலிமன் தலைமையில் தலைவர் தி சுந்தரலிங்கம் அவர்களைப் பாராட்டும் விழா ஆரம்பமாகியது

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக தீவகத்தில் ஒரு சிறந்த கூட்டுறவாளனாக ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளராகவும் பத்து வருடங்களுக்கு மேலாக தலைவராகவும் சேவையாற்றி வருகின்ற தலைவர் தி சுந்தரலிங்கம் அவர்களைக் கௌரவிப்பது கூட்டுறவுலகுக்கு பெருமை சேர்க்கின்ற அம்சமாகும்

அதனால்தான் எமது ஊழியர் தொழிற் சங்கத்தின் சார்பில் அவரைக் கௌரவித்து விழா எடுத்துள்ளோம் எனக் கூறி தலைமையுரையை முடித்துக் கொண்டார்

தொடர்ந்து சங்க மூத்த பணியாளர் பி குணநாயகம் தலைவருக்கு மலர் மாலை அணிவிக்க வரவேற்க, ஊழியர் தொழிற்சங்கத்தால் தங்கப்பதக்கமும் பாராட்டிதமும் வழங்கப்பட்டது

தொழிற்சங்கம் சார்பாக தங்கப் பதக்கத்தை கிளி அரச செயலக திட்டப் பணிப்பாளர் மூர்த்தாலசிங்கம் அவர்களும் பாராட்டிதழை கிளி கூட்டுறவு உதவி ஆணையாளர் நா முருகேசு அவர்களும் வழங்கி கௌரவித்தனர் இவ்வேளை சபையை அலங்கரித்த அனைவரும் கைதட்டி வரவேற்று தம் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொண்டனர்

சங்க அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட வாழ்த்துப் பத்திரத்தை ஓய்வுபெற்ற அதிபர் அ. அலோசியஸ் வாசித்து வழங்கினார்

சங்க அங்கத்தவர்கள் சார்பில் கிளி மயில்வாகனபுரம் அ. த. க. பாடசாலை அதிபர் த. இராசசிங்கம், பணியாளர் சார்பில் வ. ஜெயக்குமார் அவர்களும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்களும் பாராட்டுரை வழங்கினர்.

# கூட்டுறவு நிறுவனங்களின் செயற்திறன் மேம்பாட்டிற்கு அதன் பணித் தொகுதிக்கான ஊக்குவித்தல் அவசியமாகிறது!

கூட்டுறவு நிறுவனங்கள் ஓர் மனித உறவிலான சமூக மேம்பாட்டுக் கட்டமைப்பாகும். அது தனது இலக்கையடைய மூலதனம், மூலவளம், முனை வளம் ஏனையவற்றை முறையாக பயன்படுத்துதல் அவசியமாகிறது. இவற்றுள் நிறுவனத்தை உருவாக்கிய வெளியக மனித வளத்தின் தேவையறிந்து சேவையை வழங்கும் அளவிற்கு நிறுவனத்தின் உள்ளக மனிதவளம் செயற்படுதல் அவசியமாகிறது எனவே உளவியல் ரீதியான தொழிற் சூழலை உள்ளக மனித வளமான ஊழியர் அல்லது பணியாளருக்கு வழங்குதல் வேண்டும்.

சமூக அமைப்புக்களான நிறுவனங்கள் பெருமளவில் மனித வளத்திலேயே தங்கியுள்ளதுடன் தொழிற் சூழலில் மற்றுமோர் அத்தியவசியமான மூலகமாக மனித வளங்கள் காணப்படுவதால் நிறுவன செயற்பாடுகளில் மனித வளப் பண்புகள் (வயது, இடப்பெயர்வு, கல்வியறிவு. பயிற்சி) வலுவான தாக்கத்தை ஏற்படுத்துவதை நாம் அறிந்து கொள்ளலாம்.

எனவேதான் நவீன முகாமைத்துவ வளர்ச்சிப் போக்கில் ஒவ்வோர் சமூக நிறுவனங்களும் மனிதவள முகாமைத் தொழிற்பாட்டில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

மனிதவள முகாமைத் தொழிற்பாடென்பது நிறுவனத்தின் தேவைகள், திறமைகள், இயலுமைகளுடன் அதனது ஊழியரை ஒப்பீடு செய்வதாகும் இங்கு நிறுவனத்தின் தேவைகள், விருப்புகள், எதிர்பார்க்கைகளை வழங்கும் ஊழியருக்கு நிதி, நிதிசாரா ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலம் தூண்டப்படுவது அவசியமாகிறது. இவற்றை மேற்கொள்ள மனித வள முகாமையானது ஊழியரிடல், பயிற்றுவித்தல், அபிவிருத்தி, கொடுப்பனவுகள் மற்றும் தொழிலாளர் உறவில் ஈடுபடல் போன்ற நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டல் அவசியமாகின்றது. இவை திறமையாக மேற்கொள்ளப்படும்போது நிறுவனத்தால் கவரப்படும் ஊழியர்கள் நிலைத்திருக்கவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் தமது கருமங்களை சுய விருப்பின் மூலம் முன்வந்து நிறைவேற்றுபவராகவும் தமது செயற்பாடுகளில் திருப்தியடைபவராகவும் காணப்படுவர் இதை அடையாளம் காண தொழில் ஆய்வு, வெளியீட்டு மதிப்பீடு, ஆளணித் திட்டமிடற்திறன் என்பவற்றின் மூலம் கண்டறியலாம்,

மேற்குறித்த விடயங்கள் சமூக நிறுவனமான கூட்டுறவு அமைப்புக்களில் நடைமுறைக்கிடுதல் அவசியமாவதுடன், "ஊழியரின் செயல்திறன் நிறைவேற்றல்" அவரின் ஊக்கப்படுத்தலில் தங்கியுள்ளது ஆனால் ஆற்றல் இருந்தும் ஊக்கப்படுத்தல் இல்லாத போதும் ஊக்கப் படுத்தல் இருந்தும், ஆற்றல் இல்லாத போதும் விளைவு பூச்சியம் "0" ஆகு என்பதை கூட்டுறவு நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளும் முகாமைச் சமூகமும் அறிந்து கொள்ளல் மிக அவசியமாகிறது

இ சிவநேசன்
பொது முகாமையாளர்
வட மாகாண
ப. கெ. வ. அ. கூ. நி.
பேரிணையம்.

ஊக்கப்படுத்தல் குறைவால் ஊழியரிடம் காணப்படும் குறைபாடுகள்

1. வேலையில் ஆற்றல் இன்மை
2. சலிப்புத்தன்மை.
3. கவனக்குறைவு.
4. நேரத்தினை விரயம் செய்தல்
5. தேவைக்கதிகமாக மருத்துவ லீவு எடுத்தல்.
6. வரவு-ஒழுங்கீனம்
7. நிறுவன இலக்கை அடைவதற்கான பங்களிப்பு குறைவாக காணப்படும்.
8. தரமற்ற உற்பத்தி உருவாதல்
9. உற்பத்தி அதிகரிப்பின்மை.
10. மூலப்பொருள் அழிவுப் பொருள் விரயம் அதிகரித்தல்.

ஊக்கப்படுத்தலின் அவசியம்

1. நிறுவனம் சிறப்பாக இயங்குவதற்கு ஊக்கப்படுத்தல் அவசியம்.
2. ஊழியர்களிடமிருந்து வினைத்திறமையுள்ள செயற்திறனைப் பெற்றுக் கொள்வதற்கு. எனவே எந்த செயற்பாட்டிற்கும் ஊக்கப்படுத்தல் அவசியமாகும். ஊக்கப்படுத்தலின்றி எந்த செயற்பாடும் திறமையாக இயங்காது. ஊழியரிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பைப் பெற்று நிறுவனத்தின் நோக்கத்தை அடைய ஊக்கப்படுத்தல் அவசியமாகிறது.

சிறந்த ஊக்கப்படுத்தல் முறையானது பின்வரும் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. ஊழியர்களை வேலை செய்யும்படி தூண்டுதல் வேண்டும்.
2. தரமான உற்பத்தி அதிகரிப்பினை ஏற்படுத்துவதாக காணப்படல் வேண்டும்
3. ஊழியரின் சகல தேவைகளையும் திருப்திபடுத்துவதாக காணப்படல்.
4. ஊக்கப்படுத்தல் பக்கசார்பின்றி நடுநிலமை பேணுவதாக இருத்தல் வேண்டும்
5. காலத்திற்கேற்றாற் போல் நெகிழ் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

உரிமைகள் வரைப்படுத்தலுக்கு மேலாக கொள்கை வகுப்பும் (நடைமுறைவிதி) அதை நடைமுறையில் பயன்படுத்தலும் அவசியம்.

நிதிசார் ஊக்குவிப்பு

1. உரிய நேரம் சம்பளம்.
2. ஊ: சே. நிதி ஊ. ந: நிதி
3. மேலதிகநேர கொடுப்பனவு.
4. லீவுநாள் வேலை சம்பளம்,
5. ஊக்கக் கொடுப்பனவு (அ/ாவப்படி)
6. இலாபப்பங்கீடு.
7. பொற்கிளி வழங்கல்.
8. வட்டியில்லாக் கடன்
9. முற்பணம் வழங்கல்.
10. பணிக்கொடை ஒதுக்கம்,
11. காருக் கட்டணம் (கிளை நிலையங்களில்)
12. வருடாந்த சம்பள உயர்ச்சி
13. வாழ்க்கைத் தள்ளுபடி, சங் பங்களிப்பு —50/- பணி " —25/-
14. காப்புறுதி செய்தல்,

நிதிசாரா ஊக்குவிப்பு

1. பாராட்டு
2. சான்றிதழ் வழங்கல்
3. பயிற்சி வழங்கல்,
4. வைத்திய பிரயாணவசதி செய்தல்
5. புலமைப்பரிசில் வழங்கல்
6. பதவி உயர்வு வழங்கல்.
7. கருத்தரங்கு கலந்துரையாடல், பிரதிநிதி அனுப்புதல்.
8. ஆலோசனை கோரல்.
9. குடியிருப்புவசதி செய்தல்
10. சம்பளத்துடனான லீவு வழங்கல்
11. பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்,
12. நலமேம்பாட்டுக்கு (பத்திரிகை, நாவல், தேனீர்)
13. அலுவலக அமைப்பும், இட வசதியும்.
14. அலுவலக வசதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கல்வி வலய விளையாட்டுப் போட்டி

பல்வேறுவகையான நெருக்கடிகள், வளப் பற்றாக்குறைகளின் மத்தியிலும் இவ்வகை விளையாட்டுப் போட்டி மிக சிறப்புற நடைபெற்று இருக்கிறது என்பது பாராட்டுதற்குரியது என கிளிநொச்சி வலய மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு இளங்குமரன் அவர்கள் தெரிவித்திருந்தார்.

கோணாவில் அக்கராயன் அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளின் முதன்மை விருந்தினராக வன்னி கல்வி வலய இணைப்பாளர் திரு பொன் சபாபதி அவர்கள் கலந்துகொண்டார். அவர் தமது உரையில் குறிப்பிடுகையில் கிளிநொச்சி மாவட்ட பதினைந்து வருட வரலாற்றில் இம்முறை மட்டுமே முதற்தடவையிலேயே மாவட்ட மட்டப் போட்டி நடாத்தப் பட்டுள்ளது. இது ஒரு பாராட்டப்பட வேண்டிய நடவடிக்கையாகும் என தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கான போட்டிகளுடன் ஆசிரியர்களுக்கான போட்டிகளும் இந்நிகழ்வில் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் அதிக புள்ளிகளைப் பெற்றது. 15 வயதின் கீழ்ப்பிரிவில் ஆண்களுக்கான சம்பியனாக தர்மபுரம் ம.வியைச் சேர்ந்த செல்வன் பு. முத்துக்குமார் தெரிவுசெய்யப்பட்டார். இதுபோலவே பெண்களுக்கான சம்பியனாக முழங்காவில் ம.வியைச் சேர்ந்த செல்வி பா. கோகிலா தெரிவு செய்யப்பட்டார்.

17 வயதுப் பிரிவில் தருமபுரம் ம.வியைச் சேர்ந்த சி. விமலதீபன் ஆண்களுக்கான சம்பியனாகவும் அக்கராயன் ம.வியைச் சேர்ந்த செல்வி செ. திருமகள் பெண்களுக்கான சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

.. வயதுப் பிரிவில் ஆண்களுக்கான சம்பியனாக முருகானந்த மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த நா. நிரஞ்சன் குமார் உருத்திரபுரம் ம.வியைச் சேர்ந்த இ. சிவகுமார், அக்கராயன் ம.வியைச் சேர்ந்த இ. குமாரலாவின் ஆகியோரும் பெண்கள் பிரிவில் அக்கராயன் ம.வியைச் சேர்ந்த க. திருமகள் தெரிவுசெய்யப்பட்டார்.

21 வயதுப் பிரிவில் தர்மபுரம் ம.வியைச் சேர்ந்த ஆண்களுக்கான சம்பியனாகவும் அக்கராயன் ம.வியைச் சேர்ந்த சுமதி இறஜிதா ஆகியோர் பெண்களுக்கான சம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## வடமராட்சிக் கிழக்கு ப.நோ.கூ.ச. 9ம் ஆண்டு விழா

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது 9ம் ஆண்டு நிறைவை உடையார்கட்டிலுள்ள வள்ளிப் பிராந்திய அலுவலகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடியது.

மேற்படி சங்கத் தலைவர் கி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் முல்லை அரசாங்க அதிபர் சி. தர்மகுலசிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

9-ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வள்ளிபுனம் இனிய வாழ்வு நிலையம், உடையார்கட்டு அரசினர் வைத்தியசாலை என்பவற்றிற்கும பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிதி உதவியளித்துள்ளது.

அத்தோடு பணியாளர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் புற்றுநோய் சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலை அமைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

புற்றுநோய்ச் சிகிச்சை கருவிகளுடன் இயங்கி வந்த தெல்லிப்பளை வைத்தியசாலையை புனரமைப்பதா? அல்லது யாழ்ப்பாணத்தில் புதிதாக நிறுவுவதா? என அரச அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசனைகள் நடைபெற்று வருகிறது.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் பொருத்தப்பட்டிருந்த புற்றுநோய் சிகிச்சைக் கருவிகள் சில அச்சுவேலி மகரகம வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்தது. யாவரும் அறிந்ததே! இப்போது இவற்றை அங்கிருந்து மீண்டும் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அரிசி ஆலை அமைப்பு

விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரிசி ஆலை ஒன்றை விசுவமடுவில் அமைந்துள்ளது இதனூடாக மக்களுக்கு குறைந்த விலையில் நெல் குற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசேட நுகர்ச்சிக் கிளை திறப்பு

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களின் நலன் கருதி உடையார்கட்டில் விசேட நுகர்ச்சி விற்பனவு நிலையமொன்றை திறக்க ஏற்பாடு செய்து வருகிறது.

இதற்கான நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல் அறுவடை

கிளி புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாய உற்பத்திப் பகுதியினூடாக மேற்கொண்ட 10 ஏக்கர் காலபோக நெற்பயிர் செய்கை அறுவடையை தொடர்ந்து சிறுபோகச் செய்கையிலும் ஈடுபடவிருப்பதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

## மயிலிட்டித்துறை கடற் கூ. சங்கத்திற்கு உதவி

மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு யாழ் கியூடெக் நிறுவனம் ரூபா ஒரு இலட்சம் நன்கொடை வழங்கியுள்ளதாக அதன் தலைவர் நமசிவயம் தெரிவித்துள்ளார். இராணுவ நடவடிக்கைகளினால் நீண்டகாலமாக பாதிக்கப்பட்ட இச் சங்கம் தற்போது பருத்தித்துறையில் இயங்கி வருகிறது.

## புளியங்குளம் ப.தெ.வ.அ.கூ.ச இடப்பெயர்வு

புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் முற்றாக இடம்பெயர்ந்துள்ளது.

ரணகோச இராணுவ நடவடிக்கை காரணமாக தனது சங்க தொழிற்சாலை சொத்துக்களை கைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் அங்கத்தவர்கள், பணியாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

## புதிய அலுவலகம்

ஜீவிபல இராணுவ நடவடிக்கை காரணமாக ஒதியமலைக்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் உடையார்கட்டுப் பகுதிகள் கிளைகளைத் திறந்து செயற்பட்டு வருகிறது. இதன் தலைமை அலுவலகம் புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ளது.

## உணவகம் திறப்பு

முல்லை காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்களின் நலன் கருதி புதுக்குடியிருப்பு நகரில் உணவகம் ஒன்றினை திறந்து வைத்துள்ளது.

---

## அன்னை

டிக்கப்படுகிறது:

சித்திரை 19 நினைவுநாள் மிகச் சிறப்பான முறையில் கலை நிகழ்வுகளும் பொதுக் கூட்டங்களும் நடாத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## நெல்லிற்கு

சங்கங்கள் ஒருவரிடமிருந்து 5மூடை நெல் மட்டுமே கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது. இது விவசாயிகளைப் பாதிக்கின்ற செயலாகும். குறைந்தது ஒரு விவசாயியிடம் இருந்து 20 மூடை நெல்லாவது கொள்வனவு செய்யப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் திரு சொலமன் சூசிறில் அவர்களிடம் கேட்டபோது, இது விவசாயிகளின் பிரதேசம் எனவும், பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமது ஜீவனோபாய தொழிலான விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகள் எவ்வித கஸ்டலுமற்று தமக்குரிய நியாய விலையை தமது உற்பத்திகளுக்கு பெற்றுக் கொள்ளவும் அத்தவேளை பாவனையாளர்களும் அப்பொருளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியதான சமச்சீர்நிலைமை பேணப்பட வேண்டும் இதுவே உற்பத்தியாளருக்கு கூடிய விலையும் பாவனையாளருக்கு குறைந்த விலையும் பேணும் சமநிலைப்படுத்தற் கோட்பாட்டின் அடிப்படையாகும் எனத் தெரிவித்தார். (அ. அ)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி நெறி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளை இளைஞர், யுவதிகளுக்கான பல்துறைசார் பயிற்சி நெறிகளைக் கொடுத்து சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

பங்குனி 29 அன்று சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இதன் தலைவர் S. தர்மரெத்தினம் அவர்கள் தலைமையில் சந்தபுத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. திரு மயாலசிங்கம் திரு அரியரத்தினம், திருகுசிறில் திருமதி ஐயாத்துரை ஆகிய முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

தட்டச்சு கருத்தெழுத்து, கணனி, தையல், பன்னவேலை என்பவற்றுக்கு பயிற்சியளித்த ஆசிரியர்கள் மாணவர்களால் கௌரவிக்கப்பட்டனர். இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்கால செயற்திட்டங்கள் குறித்து அதன் செயலாளர் பொன் விநாயகமூர்த்தி விளக்கமளித்து உரையாற்றினார்.

## பாரஊர்தி கொள்வனவு

அரச அதிபரின் உணவு வாணைத் தொடரணி சேவையில் ஈடுபடுத்துவதற்காக முல்லை வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இசுசுரக பார ஊர்தி ஒன்றை கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

## பனம் வெல்லம் விற்பனைக்கு

கிளி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மலிவு விலையில் பனம் வெல்லத்தை சந்தைப் படுத்தியுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## முல்லை கூட்டுறவு ஒன்றிய தலைவர் தெரிவு

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவராக திரு சிறீஸ்கந்தராசா தெரிவானார்.

அண்மையில் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியப் பிரதிநிதிகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் இத் தெரிவு இடம்பெற்றது.

திரு சிறீஸ்கந்தராசா புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமாவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## செயலக வளாகத்தில் பயிற்சிப் பட்டறை

நெற் கொள்வனவும், அரிசி உற்பத்தியும் பற்றிய பயிற்சிப் பட்டறை கிளி அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம் தலைமையில நடைபெற்றது. கிளி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளும் மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரி மாணவர்களும் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றனர் கிளி செயலக தொழில் நுட்ப உத்தியோகத்தர் வ. தயாபரசிவம் விரிவுரை நிகழ்த்தினார்.

## அனைத்துலக மகளிர்நாள் பங்குனி 8

பங்குனி 8 அனைத்துலக மகளிர் நாள் இந் நாளில் பன்னாட்டு மகளிர் சமூகம் தம் மேம்பாட்டுக்காக குரல் எழுப்பி வருகிறார்கள் இது ஆண்டு தோறும் வேகம் கொள்கிறது.

20 ஆம் நூற்றாண்டில் மகளிரின் துணிச்சப் போராட்டங்கள் அவர்களுக்கு சில சாதகமான அம்சங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளன என்பது உண்மை தான் ஆயினும் இங்கே குறிப்பிடும் சில தகவல்கள் சிந்திக்க கூடியவை

80 வீதமான பன்னாட்டு மகளிர் பாலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆண்டு தோறும் அமெரிக்காவில் 7 இலட்சம் ஐரோப்பாவில் 4 இலட்சம் ஆசியாவில் 6 இலட்சம் பெண்கள் பாலியல் துன்புறுத்தல், சித்திரவதை போன்றவற்றால் துன்புறுத்தப்படுகிறார்கள்.

1995 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி அமெரிக்காவில் 60 வீதமான குடும்பப் பெண்கள் விபச்சாரம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாகி வருகிறார்கள்.

அமெரிக்காவில் மட்டும் விநாடிக்கு 15 பெண்கள் பாலியல் பிணக்குகளினால் கொல்லப்படுகிறார்கள்.

இந்தியாவில் சீதனக் கொடுமை காரணமாக ஆண்டு தோறும் 5000 பெண்கள் கொல்லப்படுகின்றார்கள்.

மேற்படி விபரங்களை பன்னாட்டுப் பெண்கள் பாதுகாப்புநிறுவனமொன்று வெளியிட்டுள்ளது. (க)

---

## பொதுக்

திரள் ஆகியோர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியினால் கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் நிதி உதவியுடன் தீவகமக்கள் நலன் காக்கும் சமூகத்தினால் பொதுக் கிணறு அமைக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா அண்மையில் கழகத் தலைவர் ப. கனகலிங்கம் தலைமையில் முழங்காவில் இரணைமாதா நகரில் இடம் பெற்றது பெருந்தொகையான மக்கள் பங்குபற்ற முதன்மை விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் வருகை தந்து சிறப்பித்தார் நீண்ட காலத்துக்குப் பின் இப்பகுதியில் அமைக்கப்பட்ட திறந்த கிணறு இது என்பது குறிப்பிடதக்கதாகும்

## புலிகளை

வேறிய இனப்பிரச்சினை தோற்றம்பெற்றது எனவும் தெரிவித்துள்ளார். அரசியல் கலாச்சார, மனோரீதியாக நாம் சிறிலங்காவில் சிங்களத்தை உருவாக்க நினைத்தோம். பிரஜா உரிமைச் சட்டம், சிங்களத் தேசியக்கொடி பௌத்தத்துக்கான முன்னுரிமை தனிச்சிங்களச்சட்டம் இனரீதியான கல்விமுறை என்பனவே தமிழர்களைப் போராடத் தூண்டியது, இதனால்தான் இலங்கை உங்கள் நாடா? என கேட்கப்படும் போது 'ஆம்' என சொல்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமம்
SANGAMAM

ஆறு 2 அருவி 7
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி மார்ச் 1999

## அத்தியாவசிய உணவு நிவாரணம் வருவதை அரசு உறுதிப்படுத்தவேண்டும்

போர்ச் சூழலற்று அமைதியாகவிருந்த மடு தெட்சணா மருதமடு பிரதேசங்கள் இராணுவப் பிடிக்குள் சிக்கியுள்ளன.

மடு தேவாலயம் ஆயுதப் பிரயோகமற்ற பகுதியாக விளங்கிய போதும் இதைக்கூட இராணுவம் விட்டுவைக்கவில்லை இப்பகுதியினூடாக வந்த அரசஅதிபரின் வாகன தொடரணிகள் கூட நிறுத்தப்பட்டுள்ளன,

இதுஒரு நீண்ட தொடர் கதையாகவே இருக்கிறது

வன்னிக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்து வருவதற்கான போக்குவரத்துப் பாதைகள் இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக அடிக்கடி சீர்குலைந்து வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இதுபற்றி சிறிலங்கா அரசுக்கு பல பொது அமைப்புக்கள் எடுத்துக் கூறிய போதும் அதை அரசு விளங்கிக் கொண்டதாக தெரியவில்லை

இராணுவ கெடுபிடி பொருளாதார தடை போன்றவற்றால் ஏற்கனவே நுகர்ச்சிப் பொருட்களைக் கொண்டு வருவதில் சிக்கல் பல!

அரசின் நிவாரணம் வெட்டினால் பாதி நிவாரணத்தைப் பெற்று அரைவயிறும், கால்வயிறுமாக வயிறு சொதிக்க வாடும் நான்கு இலட்சம் மக்கள் இவற்றைக் கூட பெறமுடியாமல் பட்டினிச் சாவை எதிர் நோக்குகிறார்கள்.

தேவையான நுகர்ச்சிப் பொருட்களைக் கொண்டு வருவதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காரிய நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது

தேவையான அத்தியாவசிய நுகர்ச்சிப் பொருட்களை அரச அதிபர்களின் தொடரணியூடாக கொண்டு வருவதற்கான போக்குவரத்துப் பாதை அவசியம் இது இராணுவ அச்சுறுத்தல் அற்றதாக இருப்பதை அரசு உறுதிசெய்யவேண்டும்,

அப்போது தான் உணவுத் தங்குதடையின்றி வந்து சேரமுடியும் அல்லாது விடின் அரசின் மனித உரிமை மீறலாக, மனிதாபிமானமற்ற செயலாகவும் கருதப்படும். எந்தவிதமான யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரச அதிபரின் தொடரணிகள் வருவதை உறுதிசெய்யப்பட வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதும் அவர்களது இயல்பு வாழ் நிலையைப் பாதிப்புறச் செய்வதும் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்பதை சிறிலங்கா அரசும், இராணுவமும் உணர வேண்டும்.

மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை வன்னிக்கு கொண்டு வருவதற்கான பணியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே ஈடுபட்டு வருகின்றன.

கிளிநொச்சி முல்லைத்தீவு அரசஅதிபர்களின் தொடரணியூடாகவே இச் சேவைகள் நடைபெறுகின்றன,

ஆதலால் சுயாதீனமான, பாதுகாப்பான, எவ்வித தடையுமற்ற இராணுவ அச்சுறுத்தலற்ற போக்குவரத்துப் பாதையூடாக,

இச் சேவைகள் நடைபெற சிறிலங்கா அரசு உறுதிப்படுத்த வேண்டும் என மனிதாபிமானத்தின் பேரால் கூட்டுறவின் குரலாக அரசுக்கு அழுத்தமாக கூறுகின்றோம்.

### கூட்டுறவு கீதம்

கூட்டுறவு மந்திரத்தைச் சொல்லுவோமே — இங்கு
கூடிடும் பசிப்பிணியை வெல்லுவோமே
- (2)

நாட்டில் வாழ்வோங்கி நிலைபெறவே — நல்ல
ஞானப் பெரியோர்கள் காட்டி வைத்த
(கூட்டுறவு — )

அன்புடனே வாய்மை தவில் நேர்மைகொண்டு
ஆர்வமாய் அனைவருமே ஒன்றாய்த்திரண்டு
இன்புடனே பெருவாழ்வு உழைத்திலென்றும்
உயர்வான கூட்டுறவுக்கு உயிராமன்றோ
(கூட்டுறவு — )

அன்புடனே மக்களிங்கு சேர்ந்தபோது
தெய்வம் வந்துள்ளது என வந்தனைந்து
தென்பு தரும் கல்விச் சுதந்திரமும் மேலாம்
தேசபக்தி விவசாயம் செழிக்கச் செய்யும்
(கூட்டுறவு )

## விவசாய உற்பத்தி, நுகர்ச்சி சேவை கூட்டுறவுச் சங்கம்

விவசாய உள்ளீடுகள் வழங்குவதற்கும், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் விற்பதற்கும், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைப் பதனிட்டு பொதி செய்து விற்பனை செய்வதற்கும் என யாழ் மாவட்டத்தில் விவசாய உற்பத்தி, நுகர்ச்சிச் சேவை கூட்டுறவுச்சங்கம்ஒன்று உரும்பிராய், ஊரெழுப் பகுதிகளில் அமைக்கப்பட்டதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் திரு. எஸ் கே சண்முகநாதன் தெரிவித்துள்ளார்

உடனடியாகவே பழங்கள் பதனிடப்பட்டு, விற்பனை செய்யும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-அ)

### கிருமி நாசினி உரம் விற்பனை

முழங்காவில் விநாயகபுரம் விவசாய கூட்டுறவுச் சங்கம் அண்மையில் தனது சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.

கிருமிநாசினி வகைகள், உர வகைகள் தரமான நல்லின விதைகள் போன்றவற்றை நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் தனது களஞ்சியத்தில் வைத்து விநியோகித்து வருகிறது

### மண்ணெண்ணெய் இன்றி வாழைச்செய்கை பாதிப்பு

முழங்காவில் பகுதியில் வாழைகள் காய்ந்துவருகின்றன.

குழாய்க்கிணறு மூலம் நீர் இறைத்து வாழைத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு போதியளவு மண்ணெண்ணெய் வழங்கப்படாததால வாழைகள் காய்ந்து வருகின்றன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தங்களுக்கு மாதாந்தம் குறைந்தளவு 50 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் ஆனால் விநாயகபுரம் விவசாயக் கூட்டுறவுச் சங்கம் மூலம் 10 லீற்றர் மட்டுமே வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

சமீபகாலமாக மண்ணெண்ணெய் வெளிச்சந்தையிலும் 150 ரூபாவுக்குமேல் விற்பனை செய்யப்படுவதால் தொடர்ந்து வாழைச்செய்கையில் ஈடுபட முடியாதிருப்பதாகவும் முழங்காவில் விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### புதிய பிரதிக் கல்விப்பணிப்பாளர்

கிளிநொச்சி வலயத்தின் புதிய பிரதிக் கல்விப் பணிப்பாளராக திரு மா. தெய்வேந்திரம் அவர்கள் பதவியேற்றுள்ளார்.

கணித சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியரான இவர் கிளி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபராகவும் கடமையாற்றியவர் கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து இம் முறை தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

### இந்து மாமன்றம் புலம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு உதவி

போரினால் துன்புறும் வன்னி மாவட்ட மக்களின் துயர்துடைப்பிற்காக அகில இலங்கை இந்துமா மன்றம் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

வவுனியா, மன்னார் கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களில் புலம் பெயர்ந்து வாழும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட இந்துமா மன்றம் ஏற்பாடுகள் செய்துள்ளதாக அதன் செயலாளர் க. நீலகண்டன் தெரிவித்துள்ளார்

இவ் நிவாரணப் பொருட்கள் உரியவர்களுக்கு போய் சேர வவுனியா அரசாங்க அதிபரின் உதவியை நாடியுள்ளதாகவும் மேலும் தெரிய வருகிறது,

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவர்களால் சேகரிக்கப்பட்ட 133 பொதி நிவாரணப் பொருட்களும் இதில் அடங்கும் என மற்றுமோர் செய்தி தெரிவிக்கின்றது.

### அனைத்துலக மகளிர் நாள்

ஆரையம்பதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அனைத்துலக மகளிர் நாளை தமது தலைமை அலுவலகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடியது

ஆரையம்பதி பொதுஅமைப்புக்களுடன் இணைந்து இவ் விழா நடைபெற்றது.

### நெல்லின் விலை 1300 - 1500

யாழ் குடாவில் காலபோக நெல் அறுவடை முடிவடைந்துள்ள போதிலும் நெல்லின் விலை குறைவடையவில்லை என மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

தென்மராட்சிப் பகுதியில் 1 மூடை நெல் ரூபா 1300 முதல் 1500 வரை செல்கிறது.

### உடல் வளம் பேணும் பாடசாலை இல்லப் போட்டிகள்

பல்வேறு வகையான நெருக்கடிகளுக்குமத்தியிலும், ஸ்கந்தபுரம் பகுதியில், அமைந்திருந்த பாடசாலைகளுக்கான இல்ல விளையாட்டுப் போட்டிகள் குறித்த காலத்தில் சிறப்புற நடைபெற்று முடிந்து விட்டன.

பாரதிபுரம் வித்தியாலயம், அக்கராயன் ம. வி, அக்கராயன் அ. த. க. பாடசாலை, சிவபாத கலையகம் என்பன வீதிவோட்டங்களையும், கனகாம்பிகைக்குளம் அ. த. க பாடசாலை நாட்டுக் குறுக் கோட்டம் நிகழ்வினையும் மேலதிக நிகழ்வுகளாக நடத்தின. அத்தோடு அக்கராயன் ம.வி. விளையாட்டுப் போட்டியில், புறா பறக்கவிடுதல், பலூன்பறக்கவிடுதல் போன்ற நிகழ்வுகளுடன் சிறப்பாக அமைக்கப்பட்ட இல்லங்களுமாக விளையாட்டுப் போட்டி சிறப்புற நடைபெற்றது

இதே வேளை சத்ஜெய இராணுவ நடவடிக்கையுடன் இடம் பெயர்ந்து மூன்று வருடங்களின் பின் தமது சொந்த இடமான சிவநகர் குரும்பியபிள் இவ்வருடம் அதிபர் திரு மூ குலசிங்கம் அவர்கள் தலைமையில் மூன்னூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாரதி, இளங்கோ, வள்ளுவர் எனும் இல்லங்களாக பிரிந்து பெருந்திரளான பெற்றோரின் பங்குபற்ற லுடன் சிறப்புற நடைபெற்றது. உபவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு வைரமுத்து பிரதம விருந்தினராகவும், அக்கராயன் ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் திரு. இராமலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர் இப் போட்டியில் செயலாளராக திரு மு. செந்தில் குமரன் கடமையாற்றினார். (அ-அ)

### நிதியம் ஆரம்பம்

போர் அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளாகும் பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய வகையில் நிதியம் ஒன்று ஆரம்பிக்க யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தீர்மானித்துள்ளது

இத் திட்டத்தின் பிரகாரம் பணியாளர்களின் மாதச் சம்பளத்தில் 5 ரூபா விருப்பத்தின் பேரில் கழித் தெடுப்பதெனவும் சங்கம் 10 ரூபாவை இந் நிதியத்திற்கு செலுத்துவதெனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,

யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உதவி ஆணையாளர் செ. கு சண்முகநாதன் தலைமையில் யாழ் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் பங்குபற்றிய மகா நாட்டில் மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

### வாசகர் ஒன்றுகூடல்

முழங்காவில் அறிவு வளர்ச்சி நிலைய அங்கத்தவர், வாசகர் மாதாந்த ஒன்றுகூடல் அதன் தலைவர் சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்றது,

கிராம ரீதியாக வாசகர் வட்டத்தை உருவாக்குவது இதன்மூலம் கிராம மக்களை வாசிக்கத் தூண்டி அறிவை வளர்ப்பது, பொது அறிவு, வினாடி வினா போட்டிகளை நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கிளி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் சார்பாக இப் பத்திரிகை
கிளி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அச்சகத்தில்
1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது
பிரதம ஆசிரியர் ப. கனகலிங்கம் துணை ஆசிரியர் அன்ரன் அன்பழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org